விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி


*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 17 புதன்கிழமை (01.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 164

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

## இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத்துறைக் கட்டளை அதிகாரி மேஜர் முத்தலிப் நேற்று சுட்டுக் கொலை



(நமது நிருபர்)

**இலங்கை இராணுவ புலனாய்வுத்துறையின் கட்டளை அதிகாரியொருவர் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**இரத்மலானை கொத்தலாவல இராணுவக்கல்லூரியில் கடமையாற்றிவரும் மேஜர் ரி.நிசாம் முத்தலிப் (வயது 39) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் மெனிங் டவுனில் உள்ள தனது வீட்டில் இருந்து கொத்தலாவல இராணுவக்கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த போது கிருலப்பணையில் உள்ள வீதி சமிக்ஞைக்கு அருகில் வைத்து சுடப்பட்டுள்ளார்.**

வீதி சமிக்ஞைக்கு அருகே அவரின் வாகனம் மெதுவாகச் சென்று கொண்டிருந்த பொழுது பின்புறமாக வந்த துப்பாக்கிதாரிகள் வாகனப் பின்இருக்கையில் அமர்ந்திருந்த முத்தலிப்பின் மீது 09 துப்பாக்கிச் சூடுகள் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த அவ்வதிகாரி கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிரசிகிச்சைக்கு உட்படுத்திய போதிலும் சிகிச்சை பலன்ளிக்காததால் அவர் உயிரிழந்தார்.

முத்தலிப் சுடப்பட்ட இடத்திற்கு அருகாமையில்தான் பொல்லஹொங்கொட இராணுவமுகாம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படுகொலை தொடர்பான ஆரம்பவிசாரணைகளை கிருலப்பனை பொலிஸாரும் கொழும்பு குற்றப்புலனாய்வுத்துறையினரும் மேற்கொண்டுள்ளனர். 9 மில்லி மீற்றர் துப்பாக்கியே இவரது கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் 5.5ரக துப்பாக்கி ரவைகள் சம்பவ இடத்தில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ரெலிக்கொம்மின் யாழ்.அலுவலகத்தில் தீவிபத்து

### 15 லட்சம் ரூபா பெறுமதியான கேபிள்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைவீதியில் உள்ள சிறிலங்கா ரெலிக்கொம்மில் நேற்று மாலை ஏற்பட்ட தீவிபத்தினால் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட கேபிள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று மாலை 6மணியளவில் நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு வழங்கப்பட்ட மின்சார வயரில் இருந்து மின்ஒழுக்கு ஏற்பட்டுள்ளது இதனால் அப்பகுதியில் கிடந்த குப்பையில் தீப்பற்றி அருகில் இருந்த நிலத்தின் கீழ் புதைக்கப்படும் தொலைபேசிக் கேபிள்களில் பற்றிக்கொண்டது.

இதன்போது பத்திற்கும் மேற்பட்ட கேபிள்சுற்றுக்கள் எரிந்து நாசமாகியுள்ளன. அவற்றின் பெறுமதி 15 இலட்சத்திற்கும் மேற்பட்டதாகும் என ரெலிகொம் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் உடனடியாக தீயை அணைக்கத் தவறியிருப்பின பாரியஇழப்பொன்றை ரெலிக்கொம் சந்தித்திருக்கும் என அவ்வதிகாரி

(14ஆம் பக்கம் பார்க்க)

## தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மாலைதீவு சிறைக் கைதிகள் தலைவர் பிரபாவுக்கு கடிதம்

(கிளிநொச்சி)

மாலைதீவு சிறையில் வாடும் இலங்கையைச் சேர்ந்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் கைதிகள் தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

வெள்ளைத் துணியில் பென்சிலால் எழுதப்பட்ட நீண்ட கடிதமொன்றினை தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமக்கு ஏற்பட்ட கஷ்டநிலை காரணமாக வெளிநாட்டில் வேலை செய்வதற்காக முகவர்கள் மூலம் கொண்டுவரப்பட்ட தாம் மாலைதீவு சிறையில் அடைக்கப்பட்டு பல்வேறு சொல்லணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

அங்கு தேவையற்ற விதத்தில் இலங்கையர் என்ற காரணத்தினால் மிகவும் மோசமான சித்திரவதைகளை அனுபவித்து வருவதாக அவர்கள் மிகவும் உருக்கமாக எழுதியுள்ளனர். நாற்பது கைதிகளின் சார்பாகவும் நுவரேலியாவை சேர்ந்த ஜெயராம் என்பவர் அக்கடிதத்தை எழுதியுள்ளார்.

அவர்களால் எழுதப்பட்ட நீண்ட கடிதத்தில் குறிப்பிட்ட பகுதியை இங்கு தருகின்றோம்.

சிறையில் வாடும் பெரும்பான்மையான சிங்களக்கைதிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே நான் இக்கடிதத்தை எழுதுகின்றேன் இங்குள்ள அனைத்து இலங்கைக் கைதிகளும் உங்களின் மீது பூரண

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வளாக மாணவர்கள் நேற்று விரிவுரை பகிஷ்கரிப்பு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்றுமுதல் விரிவுரைகளை பகிஷ்கரித்துள்ளனர். தமது வளாகப்பராமரிப்பிற்கும் புனரமைப்பிற்கும் என வழங்கப்பட்ட நிதியில் புதிய கட்டம் ஒன்றினை நிர்வாகம் அமைத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடந்த வருடம் இடம்பெற்ற பிரச்சினைகளுக்கு உறுதியளிக்கப்பட்ட விடயங்கள் ஒரு வருடம் ஆகியும் நிறைவு செய்யப்படாமையைக் கண்டித்துமே பகிஷ்கரிப்பில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமது பிரச்சினைகளை தீர்ப்பதாக உறுதியளித்த தரப்பினர் உடனடியாக வந்து தீர்வுகள கிடைக்காததற்குரிய காரணங்களை தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், முன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து மீட்ட ஷெல் வெடித்ததில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கச்சாய்பகுதியில் நேற்று மாலை செஷஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். நீண்டகாலமாக இறைக்காமல் இருந்த கிணற்றை நேற்று மாலை இறைத்த போது அதனுள் இருந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அதில் ஒரு ஷெல்லை

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர்சிலை விவகாரம் அரச சட்டத்தரணிகள் நியமனம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மையப்பகுதியில் அமைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலை சட்டவிரோதமான முறையில் நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டதாக பிரகடனப்படுத்துமாறு கோா நேற்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால திருமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி ஆர்.தியாகேந்திரன் முன்னிலையில் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அரச சட்டத்தரணிகள் மாவட்ட நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

திருகோணமலை நகராட்சிமன்றக்காணியில் நகராட்சி மன்றத்தின் அனுமதியின்றி சட்டவிரோதமாக

(14ஆம் பக்கம் பார்க்க)




யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavj.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



# வழக்கு விசாரணைகளில் ஏற்படும் தாமதமே நாட்டில் குற்றச்செயல் அதிகரிப்புக்குக் காரணம்

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வழக்கு விசாரணைகளில் ஏற்படும் தாமதங்கள் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

இதனால் நீதித்துறையின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும், வழக்குகளைத் துரிதமாக விசாரஷண செய்து தீர்வு வழங்குவதன் மூலம் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தலாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல் பகுதியில் புதிய நீதிமன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் பாரிய அளவில் குற்றச்செயல்கள் நடைபெறுகின்றன. இது நாட்டின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இந்தக் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கான காரணம் என்ன? குற்றச் செயல்களை இல்லாமல் செய்வது எப்படி? போன்ற விடயங்கள் குறித்துத் தற்போது கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

கொலைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றும் நீதிவான் நீதிமன்றில் இரண்டு, மூன்று வருடங்கள் வழக்கை நீடித்த பின்னர் இரண்டு மூன்று சட்டமா அதிபரிடம் கோப்புக்கள் இருக்கும். பின்னர் மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணைக்கு வரும்போது 10,12 ஆண்டுகளாகும்.

இதனால், அந்த மரணத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் சட்ட உரிமை பெறுவதற்கு காத்திருந்து பயனில்லையெனக் கூறி குறுக்கு வழியில் செல்ல முற்படுவர்.

நீதிமன்றத்துக்கு சந்தேக நபரைக் கொண்டுவரும் போதோ அல்லது சந்தேக நபர் பிணையில் விடுதலையாகி வீட்டுக்குச் செல்லும் வழியிலோ வைத்து சுடப்பட்டுவிடுவார். இவை தான் குற்றச்செயல்களுக்குக் காரணமாகியிருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)


சிறுவிளம்பரம்

மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில், வியாபார இலட்சிய விடயங்கள், வசிய, வாகன பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
(9567) இரவு 8.30 வரை


## தேசிய மட்ட சுற்றாடல் நாடகப் போட்டியில் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை 2 ஆம் இடம்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சுற்றாடல் நாடகப் போட்டியில் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்; மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உப பிராந்திய அலுவலகத்தினால் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்ட சுற்றாடல் நாடகப் போட்டியில் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை "வனத்திற்கு வாழ்வளிப்போம்" என்ற தலைப்பில் 1 ஆம் இடத்தையும், யாழ்.மத்திய கல்லூரி "கலாசார விழுமியங்கள்" என்ற தலைப்பில் 2 ஆம் இடத்தையும், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் "கடற்கரையோரமும் கடல்வளமும்" என்ற தலைப்பில் 3ஆம் இடத்தையும், இந்துக் கல்லூரி "இயற்கையை நீ அழித்தால்" என்ற தலைப்பில் 4ஆம் இடத்தையும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி "கருகத் திருவுளமோ" என்ற தலைப்பில் 5 ஆம் இடத்தையும், கந்தரோடை தமிழ்க் கந்தையா விததியாலயம "இயற்கை வளங்களைபேணுவோம்" என்ற தலைப்பில் 6.ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட இந்நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்ற நாடகங்கள் தேசிய மட்டத்தில் போட்டியிட்டன. தமிழ்மொழியில் "சுற்றாடல் மாசுபடுதல்" என்ற தலைப்பில் மத்திய கல்லூரி 1ஆம் இடத்தையும்,"வனத்திற்கு வாழ்வளிப்போம்" என்ற தலைப்பில் யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை 2 ஆம இடத்தையும், "பாவிகளாக இருக்கும்..." என்ற தலைப்பில் மன்/ புனித சவேரியா ஆண்கள் கல்லூரி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. (ந-19)

## ஊழியர் சேமலாப நிதி மீளப்பெறல்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதியை (E.P.F) மீளப்பெறுவதற்கான விண்ணப்பத்தினை எமது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து 06 மாத காலத்திற்கு மேற்பட்டும், இதுவரை நிதி கிடைக்கப் பெறாதவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக மாவட்டத் தொழில் அலுவலகம், யாழ்ப்பாணத்தில் தங்கள் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஷ்வரன் அறிவித்துள்ளார். (ந)


தொடர்பு:-

S.விவேகானந்தா
67/19, தர்மலிங்கம் லேன்,
சீனிவாசகம் வீதி,
கொட்டடி யாழ்ப்பாணம்.
T.P :- 0777 739836

வீடு வாடகைக்கு விடப்படும். (9641)


## புதிய கொல்களம்

வலிதென்மேற்கு மானிப்பாய்பறை இறங்குதுறையில் புதிய கொலகளம அமைகக்பபடவுள்ளதாகவும். இதற்காக ஹலோறரஸ்ட் மூலம் நவாலி இறங்குதுறையிலுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்காக 2005 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையில் மூலதன நிதி ஒதுககீடு செய்யப்பட்டுளளதாக பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-150)

# இராசிபலன்

01.06.2005
(வைகாசி 18, புதன்கிழமை)
நவமி காலை 6.35 மணிவரை
தசமி பின்னிரவு 4.58 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 3.23மணிவரை
இராகுகாலம் 11.52- 1.22 மணிவரை
சுபநேரம் 4.22 -5.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிதாசிந்தை, வேலைச்சுமை, காரிய தாமதம், உறவினர் வெறுப்பு. |
| இடபம் | தொழில் சிந்தை, சகோதரர் உதவி, காரிய நன்மை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | கடின உழைப்பு, பிறர் ஒத்துழைப்பு, போசன நன்மை, புதிய தகவல். |
| கடகம் | புதிய திட்டமிடல், உடல் நலக்குறைவு, அச்சமான நிலை, கட்டுப்பாடு. |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு, நண்பர்கள் விரோதம், காரிய தடங்கல், தர்மம் செய்தல். |
| கன்னி | நல்ல வரவேற்பு, வாகன வசதி, தொழில் நன்மை, களஸ்திர நன்மை. |
| துலாம் | சுகவாழ்வு, சுவாரஸ்யமான நிலை, தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், போசன சுகக் குறைவு, பணக்குறைவு. |
| தனுசு | பயந்த சுபாவம், காரிய தாமதம், புதிய திருப்பம், ரோகபயம். |
| மகரம் | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | மனப் பதட்டம், வேலைச்சுமை, செல்வாக்குக் குறைவு, அதிக செலவு. |
| மீனம் | ஜனவசியம், நண்பர்கள் உதவி, சிந்தனை மிகுதி, சயன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## தேர்ச்சில்லில் அகப்பட்ட சிறுவன்

(புங்குடுதீவு)

திருக்கேதீஸ்வரத் தேர் உற்சவத்தின் போது சன நெரிசலில் தேர்ச்சில்லில் அகப்பட்டு 4 ஆம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த எஸ்.சிவா (வயது-11) எனும் சிறுவன் காலில் படுகாயமடைந்துள்ளான்.

இந்நிலையில் இச் சிறுவனுக்கு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. (ந-126)

## அறிவை வளர்க்கும் மிட்டாய்

உணவுத்தட்டுப்பாடு அதிகம் உள்ள வடகொரியாவில உயரம், எடை மற்றும் அறிவை வளர்க்கும் மிட்டாய் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும் வளரனும் அறிவும் வளரனும் என்று பட்டுக்கோட்டையார் பாட்டை எம்.ஜி.ஆர். பாடினார். அந்த இரண்டையும் வளர்க்கும் மிட்டாயை கொரியா அறிமுகப்படுத்தியுள்ளது.

வழக்கமாக இந்த அம்சங்களை விருத்தி செய்ய கொடுக்கப்படும் மருந்துகளினால் பக்க விளைவுகள் ஏற்படும். ஆனால் இயற்கைப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் இந்தப் புதிய வகை மிட்டாய் சாப்பிட்டால் பக்க விளைவுகள் இல்லை என வடகொரியா உணவு ஆராய்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

கடல்பாசி, பீன்ஸ், கரட் மற்றும் சீசம் விதைகளைக கொண்டு இந்த மிட்டாய் தயாரிக்கப்படுகிறது. வழக்கமான சாக்லேட்டுகளுக்குப் பதிலாகக் குழந்தைகளுக்கு இந்த மிட்டாய் தரவேண்டும் என வடகொரிய கம்யூனிச அரசு உத்தரவிட்டுள்ளது.

வடகொரியாவில் உணவுத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்த தினத்தில் இந்தப் புதிய மிட்டாய் அறிவிப்பினை அந்த நாடு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## இணைந்த சேவையின் கீழான ஊழியர்களை நிரந்தரமாக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

இணைந்த சேவையின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்படி தொடர்ச்சியாக 180 நாட்கள் அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றிய ஊழியர்களுக்கும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் நிரநதர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கென அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொழில் நிரந்தர நியமனத்தைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-2)

## நிவாரண விநியோக முறைகேடு; இலஞ்ச ஊழல் ஆ.கு. விசாரிக்கும்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் நடவடிக்கைகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு சுனாமி நிவாரண உதவிகளை விநியோகிக்கும் ஒழுங்கு முறைகேடுகளையும் விசாரிக்கும் வகையில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரணம்இடம்பெறும் முறைகேடுகள் குறித்து விநியோகிப்பதில் இலஞ்ச ஊழல் குழுவிடம முறையிடலாம். இம்முறைப்பாடுகள தொடர்பாக ஆணைக்குழு விசாரணை செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இத்தகைய நிவாரண ஊழல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட புல்மோட்டை, மாத்தறைப் பிரதேசங்களைச சேர்ந்த இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு ஆணைக்குழுவின சிபார்சின் பேரில் நீதமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (ந-8)

## கண்ணீர் அஞ்சலி



அல்வாய் மேற்கு இமையாணன் உடுப்பிட்டியை வதிவிடமாகக் கொண்ட கதிரவேலு சுப்பிரமணியம் 30.05.2005 காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரத்தினசிங்கம்
குடும்பம்
தாவடி

(C/1418)


மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்

* மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
* சித்திரப் போட்டி
* புகைப்படப் போட்டி
* சிறுகதைப் போட்டி

பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்
விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.

## இன்று ஒரு தகவல்

### உணர்வுகள் பத்து

“சார் ! அன்று உங்களிடம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு பேசி விட்டேன் அதை ஒன்றும் பெரிதாக எடுத்துக்கொள்ளாதீர்கள்” என்றார் ஒருவர். “நீங்கள் உணர்ச்சிவசப்படுவதே மிகவும் அபூர்வம் அதற்காக நான் சந்தோசப்படுகிறேன் சார்” என்றேன். “என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?” என்றார். உங்களை உணர்ச்சியில்லாத மரக்கட்டை என்று தானே நமது நண்பர்கள் சொல்வது வழக்கம் என்றேன். அடபோங்கள் சார் என்று மறுபடியும் உணர்ச்சிவசப்பட ஆரம்பித்துவிட்டார்.

மனிதனுக்கு ஏற்படும் உணர்வுகள் (**Emotion**) இருக்கிறதே அதில் சில நல்லது செய்யும் (**Positive emotion**) சிலது தொந்தரவு செய்யும் (**Destructive emotion**) ஆக இவையிரண்டுவகை ஒன்று நல்லது இன்னுமொன்று கெட்டது உதாரணமாகக் கோபம் நோயை உண்டாக்கும் சிரிப்பு நோயை குணமாக்கும்.

உணர்வுகள் இல்லாமல் மனிதன் சந்தோசமாக இருக்க முடியாது நமது வாழ்க்கையை ஆட்சி செய்வதே அது தான். நீங்கள்உங்கள் வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கப் போகிறீர்களா- இல்லையா என்பதை முடிவு செய்வது உங்கள் உணர்வுகள் தான் உங்கள் ஆளுமை எப்படி என்பதை முடிவு செய்வது அதுதான் எல்லாவற்றையும் விட உங்கள் உடல் நலனை நிர்ணயம் செய்வதும் அது தான்.

மொத்தம் 10 அடிப்படையான உணர்ச்சிகள் உண்டு. அதில் 5 மோசமானது 5 நல்லவிதமானது. மோசமான உணர்ச்சிகளை எப்படி கட்டுப்படுத்துவது? நல்ல விதமான உணர்ச்சிகளை எப்படி வலுப்படுத்துவது? அது தான் இன்றைக்குத் தகவல் மோசமான உணர்ச்சிகள் எது தெரியுமா? கோபம், குற்ற உணர்வு, பயம், சலிப்பு, துக்கம், நல்லவிதமான உணர்ச்சிகள்,சிரிப்பு,அன்பு ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பு நம்பிக்கை தன்னம்பிக்கை முதலில் கூறிய 5ம் உடலுக்கு கெடுதல். பின்பு கூறிய 5ம் உடலுக்கு நல்லது இப்போது ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலில் கோபம் **Anger** இது இருதயநோயை உண்டக்கும் கோபத்தை அடக்கும்போது இரத்த அழுத்தம் அதிகரிக்கும் வயிற்றில் புண் மற்றும் மாரடைப்பு எல்லாம் வரும் எந்தக் காரணத்தினால் கோபம் வந்தாலும் சரி... அது மனதையும் கெடுக்கும் உடலையும் கெடுக்கும் உங்களுக்கு கோபம் வந்தால் முதலில் அது நியாயமான கோபம் தானா என்பதை கொஞ்சம் நிதானமாக யோசித்து முடிவு செய்யுங்கள்.

இரண்டாவது குற்ற உணர்வு **Guilt** ஒரு தவறு செய்தால் அல்லது ஒரு காரியத்தைச் செய்யத்தவறினால் அதை நினைத்து வருத்தப்படுகிறோம். தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதும் தவறு செய்யாமல் இருக்கப்பழகிக் கொள்வதும் தான் இதற்குச் சரியானவழி.

மூன்றாவது பயம் **Fear** எவற்றிற்குப் பயப்படுவது என்றில்லாமல் எல்லாவற்றிக்கும் பயப்படுகிறோம். எல்லோருக்கும் பொதுவான ஒரு பயம் நாமும் நமது உடலும் நன்றாக இருக்க வேண்டுமே என்ற பயம்தான் பயத்திற்கான மூலகாரணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும் அதன் பின் அதனை விலக்க வேண்டும்.

நான்காவது சலிப்பு **Baredom** சிலருக்கு நேரம் கிடைக்கவில்லை என்பது ஒரு பெரிய குறையாக இருக்கும் ஆனால் சிலருக்கு நேரம் இருக்கும் என்ன செய்வதென்று தெரியாது இது ஆபத்தானது இதனால் இதய நோய் செரிமர்கோளாறு தோல்தொல்லைகள் மனத்தளர்ச்சி எல்லாம் ஏற்படும். உங்களுக்கென்று ஒரு பொழுதுபோக்கு அல்லது வேலையை நீங்கள் தான் உருவாக்க வேண்டும்.

ஐந்தாவது துன்பம் துயரம் அல்லது துக்கம் **Sadness** மனிதன் வருத்தப்படுவதற்கு எத்தனையோகாரணம் இருக்கிறது. துக்கத்தைக் கண்டுபயந்தால் அது அதிகமாகுமே தவிர குறையாது. துயரத்தை மனதிற்குள் தேக்கிவைக்கக் கூடாது தாங்க முடியாவிட்டால் அழுது விடுதல் நல்லது.

இதுவரை சொன்னதெல்லாம் கெடுதல் செய்யும் உணர்வுகள். நன்மை செய்யும் உணர்வுகள் எவைதெரியுமா? சிரிப்பு (களிப்பு- **Laughter**) இது நுரையீரலுக்கும் இதயத்திற்கும் நல்ல பயிற்சி சிரித்தபின் இரத்த அழுத்தம் குறையும் மூச்சு விடுவது சுலபமாக இருக்கும் நன்றாக உறக்கம் வரும்.

அன்பு(**Love**) பலவியாதிகளை குணப்படுத்தும் நல்ல விதமான எதிர்பார்ப்பு இருக்கிறதே (**Hope**) அது வாழ்க்கையில் மிகவும் முக்கியம். வாழ்வில் ஒரு **Purpose** இல்லா விட்டால் அது பிரயோசனப்படாது.நம்பிக்கை மிகவும் அவசியம் (**Optimism**) நான் எங்கே உருப்படப் போகிறேன் என்று நினைப்பவர்கள் உருப்படுவதே இல்லை.

தன்னம்பிக்கையும் (**Self confidence**) ஒரு ஆக்க பூர்வமான உணர்வு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் உங்கள் ஹெல்த்தும் நன்றாக இருக்கும் என்பது கண்டுபிடிப்பு நல்ல விதமாகவே சிந்திக்கும் நோயாளிகள் விரைவில் குணமாகி விடுவார்கள் என்பது கண்டு பிடிப்பு.

ஆகக் கூடி பத்துவிதமான உணர்வுகளைப்பற்றி இன்று நாம் அந்து கொண்டோம் அதனால் இனி நீங்கள் உணர்ச்சி வசப்படுவதற்கு முன்பு ஒரு முறை யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு பேச்சாளர் ஒரு கூட்டத்தில் வீராவேசமாகப்பேசிக் கொண் டிருந்தார். கடைசிக் கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டார்.கூட்டம்முடிந்ததும் “ஏன்சார் அப்படி அழுது விட்டீர்கள்?” என்று கேட்டேன் “நான் பேசி முடிக்கும் போது எதிரில் உங்களைத் தவிர வேறு யாருமில்லை எல்லோரும் எழுந்துபோய்விட்டார்கள் சார்; அது தான்உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டேன் என்றார். இந்த **Emotion** ஐ எந்த ரகத்தில் சேர்ப்பது?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## எந்தக் கட்டத்திலும் தமிழ்மக்கள் மதவெறியர்களோ அன்றி எந்த மதத்திற்கும் எதிரானவர்களோ அல்லர் -வணபிதா கருணாரட்ணம் அடிகளார்

(திருகோணமலை)

தமிழ் மக்கள் செறிந்து வாழும் திருமலை நகரப் பகுதியில் திடீரென புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளமையானது தமிழர்களை மதவெறியர்களாகவும் வேறு மதங்களைப் பொறுத்துக்கொள்ளாதவர்கள் என்றொரு நிலைப்பாட்டினையும் உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய சதிமுயற்சியாகும் என வணபிதா கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இது குறித்து தெரிவிக்கையில்,

எந்தக் கட்டத்திலும் தமிழ்மக்கள் மதவெறியர்களோ அன்றி எந்த மதத்திற்கும் எதிரானவர்களோ அல்லர் அத்துடன் எந்தக் கோவில்களை அமைப்பதற்கோ சிலைகளை வைப்பதற்கோ தடையானவர்களும் அல்ல் ஆனால் பொருத்தமற்ற இடத்தில் பொருத்தமில்லாத விதமாக மக்கள் மத்தியில் தேவையில்லாத ஒன்றினை திணிக்கின்றபொழுது அதனை மக்கள் இன ரீதியாகவோ மத ரீதியாகவோ நோக்காமல் இது ஒரு மதத்திணிப்பு என்கின்ற கண்ணோட்டத்துடனேயே பார்க்கின்றனர்.

மதமாற்றத் தடைச்சட்டத்தினை அவசர அவசரமாகக் கொண்டுவரும் இலங்கை அரசு இப்படியான ஒரு ஆட்சிப்பீடத்திலே பௌத்த மதத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதே மதத்தினை அந்த மதத்தைச் சாராத மக்கள் மீது திணிக்க முற்படுகிறது.

நிச்சயமாக வட-கிழக்கில் இந்துக்கள் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் பௌத்தர்கள் அனைவரும் எந்த மதவெறியும் அற்றவர்களாக சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையினை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் அனுமதிக்க முடியாது.

இது சமாதானத்திற்குப் பாரிய இடையூறாக அமைந்து விடும் என்பதனை முக்கியமாகச்சொல்லி வைக்க விரும்புகிறோம் என்றார். (ற-4)

## உலக உணவுத் திட்டத்தின் உலர் உணவு நிவாரண விநியோகம் இம் மாத இறுதி வரை நீடிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலக உணவுத்திட்டத்தின் உலர் உணவு நிவாரண விநியோகம் இம்மாத இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டத்திடம் அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நிவாரண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் என்.எஸ். ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படும் நிவாரணங்கள் கடந்த ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தப்பட இருந்தன. புதிய தீர்மானத்திற்கு அமைய 12 மாவட்டங்களில் ஆழிப்பேரலைகளால் நிர்க்கதியாகியுள்ள 9இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்குத் தொடர்ந்தும் உலர் உணவு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இவை மாவட்ட செயலகங்கள் ஊடாக வழங்கப் படவிருக்கின்றன 40கோடி ரூபா செலவில் ஐக்கிய நாடுகள் உலகஉணவு திட்ட மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு 80 துவிச்சக்கர வண்டிகளும் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு 40 கணனிகளும் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## அடுத்த தேர்தலில் இலங்கை முழுவதற்கும் வேட்பாளர் நியமிக்கப்படுவர் -ஐ.தே.கட்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட மலையகம் முழுவதும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அடுத்த பொதுத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் முதலாவது பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு தசாப்தகாலமாக யுத்தம் நிலவிய காலத்தில் தோட்டத்துறை சார்ந்த மக்கள் சுதந்திரமாகப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையிலிருந்த போது ரணில் விக்ரமசிங்க யுத்த நிறுத்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டதன் மூலம் தோட்டத்துறையைச் சார்ந்த மக்கள் தென்பகுதியில் தொழில் புரிந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உருவாக்கிய சமாதான செயற்பாடுகளின் மூலம் நாட்டில் சுதந்திரம் நிலவுவதை ஜனாதிபதியும் ஏ்ப்புக்கொண்டுள்ளார். என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதே வேளை, பேராளர் மாநாட்டில் உரையாற்றிய பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் அனுர ப்ரியதர்ஷன யாப்பா தோட்டத்துறையில் தேயிலைச் செய்கை 7 வீதத்தால் குறைந்துள்ளதெனத் தெரிவித்தார். (அ-4)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி-1 மாவட்டத்தின் கீழ் இயங் குகின்ற சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2005 /2006 வருடத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் கழகத்தின் புதிய தலைவராக லயன் எஸ். சிவபாலசுப்பிரமணியமும் செயலாளராக லயன் எம்.பி. சண்முகநாதனும் பொருளாளராக லயன் கே. பிரதீபனும் தெரிவாகியுள்ளனர். இக்கழகத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் “சாவா லயன்ஸ்” செய்தி மடலின் ஆசிரியராக லயன் க.துரைராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம் அடுத்த வாரம் சாவகச் சேரியில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ற-16)

## பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள சேது சமுத்திரத் திட்டம்

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் இந்திய கடல் வலையத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பாக்கு நீரிணையினை அண்டிய பகுதியில் இந்திய மத்திய அரசு முன்னெடுக்கவுள்ள சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமானது தற்போது சர்ச்சைக்குரியதாக மாறி வருகிறது.

இது தொடர்பாக ஆராயும் கருத்தரங்கு ஒன்று கொழும்பு மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் இலங்கை பசுமை ஒன்றியம் மற்றும் “இலங்கைத் தாயைப் பாதுகாக்கும் அணி” என்பனவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் இலங்கையின் புவியியல் மற்றும் சுற்றுப் புறச்சூழல் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் நிபுணர்கள் புத்திஜீவிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்தும் பலர் கலந்து கொண்டு இந்தத்திட்டத்தினால் இலங்கையின் மன்னார் தீவுக்கும் இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டுப் பகுதிக்கும் ஏற்படக்கூடிய புவியல் ரீதியான பாதிப்புக்கள் குறித்தும் கடல் வாழ் உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் ஆராய்ந்தனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரி வித்த கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக புவியல் துறைப்பேராசிரியர் ஜே.கே. கட்டுப்பத்த சேது சமுத்திரத்திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதன் மூலம் இலங்கைக்கு குறிப்பாக மன்னாருக்கு மாத்திரமல்லாமல் தமிழ்நாட்டிலும் புவியதிர்ச்சிகள் போன்றவை ஏற்பட அது காரணமாகலாம்.

இந்தத் திட்டம் குறித்து இலங்கை அரசு தனது மக்களுக்கு சரியான விளக்கத்தை அளிப்பதுடன் இந்தியாவுடனும் இது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

இந்தத் திட்டத்தின் மூலம் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவிதப் பாதிப்பும் வராது என்று இந்திய அரசு கூறுவதை தாம் ஏற்க முடியாது என்று இந்தியாவில் இருந்து வந்து இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட வழக்கறிஞர் டி. மோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை தொடர்பில் தமக்கு திருப்தி இல்லை என்றும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தினால் இந்தியாவுக்கு போதுமான பொருளாதார நன்மைகளும் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற-4)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

அச்சுத் திணைக்களத்தினால் அச்சிடல் சேவை வகுப்பு III தரம் III லிதோ அச்சாளரும், அச்சு இயந்திர பரிசாரகரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

லிதோ அச்சு இயந்திர வேலையில் பத்துவருட அநுபவமுடையோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கும் வகையில் அரசாங்க அழுத்தகர் த.பெ. இல-507, டர்கடர் டனிடைர் டீ.சில்வா மாவத்தை, கொழும்பு-08 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (ர-21)

# போதைப் பொருளுடன் சம்பந்தப்படுவோருக்கு அதிகபட்ச தண்டனை வழங்க புதிய சட்டம்

(கொழும்பு)

போதைப் பொருட்களை வைத்திருப்போர், விற்பனை செய்வோர் மற்றும் அதனைக் கடத்துவோருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் விதத்தில் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் போதைப் பொருள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சின் பிரதிச் செயலாளர் திருமதி சந்திரா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளை வைத்திருத்தல், விற்பனை செய்தல், கடத்தல, அதனைப் பாவித்தல போன்ற குற்றங்களுக்கு எதிராக 1992ஆம் ஆண்டு கொணடுவரப்பட்ட சட்டமே தற்போது அமுலில் இருப்பதாகக் குறிப்பிட்ட பிரதிச் செயலாளர் இந்தச் சட்டம் தறபோதைய நிலையில் போதுமானதாக இல்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, இன்று சிறைச் சாலைகளில் இருப்போரில் 45சத வீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறைவாசம் அனுபவித்து வருவதாக அண்மையில் நடத்திய மதிப்பீடுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ர-2)

# சமூர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் அனுகூலங்கள் அதிகரிக்கப்படும்

## சமூர்த்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் அனுகூலங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

சமுர்த்திப் பயனாளிகளின் சேமிப்பிலிருந்து 23சதவீதமான தொகையே இதுவரை கடனாக விடுவிக்கப்பட்டது.

இதனை 80 சதவீதமாக அதிகரிக்க உத்தேசித்திருப்பதாக சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சமுர்த்தி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் கடந்த பத்தாண்டு காலமாக சமுர்த்தி இயக்கத்திற்கு சிறந்த வகையில் பங்களிப்புச் செய்தோர் பாராட்டப்பட்டனர். சமுர்த்தி இயக்கத்தின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு முரண்பாடாகவுள்ள அனைத்துத் தீர்மானங்களையும் மாற்றியமைக்கப் போவதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் கொழும்பில் மேற்கொண்ட தீர்மானங்களுக்கமைவாக கிராம மட்டத்தில் அமுல் செய்யப்பட்ட திட்டங்கள் வெற்றிதரவில்லை. எதிர்காலத்தில் சமுர்த்திப் பயனாளிகளின் கருத்துகளை மதித்து அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பயனாளிகளின் திட்டங்களுக்கு ஏற்ப சமுர்த்தி வைப்புப் பணத்தை வைத்துக் கொடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சமுர்த்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த வங்கிகளில் ஆயிரத்து 300 கோடி ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ர-5)

## வாகன விபத்தில் 8பேர் காயம்

(தம்புள்ள)

தம்புள்ள கபரணவீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுபேர் காயமடைந்துள்ளனர். பயணிகள் போக்குவரத்து பஸ்ஒன்று மணல் ஏற்றிச்சென்ற லொறியுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

கொழும்பிலிருந்து காத்தான்குடி நோக்கிச்சென்று கொண்டிருந்த பஸ்வண்டி ஒன்று கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் மூவர் குருநாகல் வைத்தியசாலையிலும் ஏனைய ஐவர் தம்புள்ள பெரியாஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ர-5)

# நெல்லியடி உணவகங்கள் மீது சுகாதார பரிசோதகர் சோதனை

(துன்னாலை)

நெல்லியடிப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய சில உணவகங்கள் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்தவாரம் சுகாதாரப் பரிசோதகர் பிரிவின் உயர் அதிகாரிகள் சகிதம் நெல்லியடிப் பிரிவு சுகாதாரப் பரிசோதகர் பா.பாலதேவா தலைமையிலான குழு நெலலியடிப் பகுதிகளில் உணவகங்களை பார்வையிடடது. அவ்வேளை கடுஞ் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டு உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சில உணவகங்களின் சமையல்பகுதி சீராக அமைக்கபடவில்லையென்பதும் சில உணவகங்களில் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசிக்கொண்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

இவற்றை உடன் நிவர்த்தி செய்யும்படி உத்தரவிடப்பட்டதையடுத்து அவ்வாறான சில உணவகங்கள் கடந்தசில நாட்களாகப் பூட்டப்பட்டுள்ளன. (து-101)

# மந்திகை வைத்தியசாலையில் டெங்குவாரம் அனுஷ்டிப்பு

(துன்னாலை)

மந்திகை வைத்தியசாலையில் கடந்த 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை டெங்குவாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் அங்கு பணிபுரியும் சகல ஊழியர்களும் இணைந்து வைத்தியசாலையின் சுற்றுச் சூழலை துப்புரவு செய்தனர்.

இதேவேளை, மேற்படி டெங்கு வார அனுஷ்டிப்பின் போது பருத்தித்துறை பிரதேசசபை ஊழியர்களும் மேற்படி வைத்தியசாலையின் சூழலில் உள்ள புல்பூண்டுகளை அழித்துத் துப்புரவுப்பணியில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன கரவெட்டி பிரதேச சபையினரால் ஒலிபெருக்கி மூலமும், கருத்தரங்குகள் மூலமும் டெங்கு பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரம் ஆங்காங்கே நடாத்தப்பட்டன. (து-101)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சத்துணவு

(துன்னாலை)

யாழ்.குடாநாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் பணியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில கல்வி கற்கும் மாணவர்களுக்கு சமைத்த உணவு, பிஸ்கற் என போஷாக்கு உணவுகள் தினமும் பாடசாலைகளில் வழங்கப்படுகிறது.

ஹரிராம் கிருஷ்ணா நிறுவனமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் சமைத்த உணவுகளை அப்பகுதி மாணவர்களுக்கு வழங்கி வருகின்றன. பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளில் தரம 1 முதல் 9 வரையான மாணவர்களுக்கு ஊட்டச்சத்து பிஸ்கறறுகளையும் மருதங்கேணி கோட்டத்தில் சமைத்த உணவுகளையும் உலக உணவுத்திட்ட அமைப்பு தினமும் வழங்கி வருகின்றது.

இதேவேளை, மாகாணக் கல்வி அமைச்சும் ஒரு வலயத்தில் 450 மாணவர் என்ற வீதத்தில் தரம் 1 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு தலா 20ரூபா வீதம் வழங்குவதாகவும் அந நிதியைக் கொண்டு பாடசாலைகளில் சத்துணவு வழங்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. (து-101)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம்-2005

**1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1)ஆம் பிரிவின்படி 2005ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான தேருநர் பதிவேடுகள் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

**(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2004ஆம் ஆண்டு தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலரால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.**

| காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் | காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பும், அல்லது அவற்றின் பாகங்களும். |
|---|---|
| 01. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். | யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் அனைத்தும் |
| 02. பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம். | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 03. மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள். | ஒவ்வொரு மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அடங்கிய பகுதியினுள் வதியும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம். | ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 05. ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம். | ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |

**3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகப் பதிவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.**

**4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும், 2005ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும், தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 2005 யூன் மாதம் 01ஆம் திகதி முதல் 2005 யூன் மாதம் 30ஆம் திகதி வரையும் இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.**

உதவிப் பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்டம்,
இல.10-யாழ்ப்பாணம்.

தேர்தல் அலுவலகம்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/1415)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

# ஐயர் ; ஐயங்கார் அந்தணர்களிலும் இருபிரிவு

7

காமாட்சி கோவிலில் "காமாட்சி விளக்கு" அமோக மாக விற்பனையாகும். உள் வீதியில் கோபுரத்தின் வடபுறத்தில் இருக்கின்ற ஆலயத்தின் விற்பனை நிலையத்தில் காமாட்சி விளக்கே பிரதானமான விற் பனைப் பொருள். அந்த விற்பனை நிலை யத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவர் ஆறு மொழியில் பேசக் கூடியவர்.

வருகின்றவர்கள் எல்லோரையும்



காஞ்சி சங்கரமட முன்தோற்றம்

வசீகரமாகப் பேசி, விற்பனையைக் கூட்டிக்கொள்வார்.

என்னுடன் வந்தவர்கள் காமாட்சி விளக்கை ஞாபகச் சின்னமாக வாங் கிக் கொண்டனர். காமாட்சி அம்பாளின் வழிபாட்டை முடித்துக்கொண்டு காஞ்சி சங்கரமடத்திற்குச் சென்றோம்.

சங்கரராமன் கொலை, அதனைத் தொடர்ந்து ஜெயேந்திரர், விஜேந்திரர் கைது, இவற்றினால் சங்கரமடம் முன் னைய சிறப்புக்களை இழந்துபோன தாக அங்கிருந்தவர்கள் கூறினர்.

முகப்பு வாயில் பூட்டப்பட்டிருந்த சங்கரமடத்தின் வெளிப்புறத்தை மட் டுமே பார்க்கமுடிந்தது.

அங்கிருந்தவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம். சங்கரராமன் கொலை யில் ஜெயேந்திரருக்குத் தொடர்பு இருந் ததா?... மெல்லக் கேட்டோம். இருக் காதா என்ன? எல்லாம் உண்மையுங்க. காஞ்சிபுரத்திற்கு இருந்த மதிப்பே கெட் டுப்போச்சு.

பெருமூச்சோடு அந்த நபர் மேலும் ஏதோ கூற முற்பட, அதற்குள் குறுக் கிட்ட இன்னொருவர் "எல்லாம் அரசிய லுங்க. அம்மாவுக்குப் பெரியவரைப் பிடிக்கல. அம்மாவின்ர தோழி சசிகலா வாங்க இருந்த நிலத்தைப் பெரியவர் வாங்கிட்டார். அதால வந்த வினை தாங்க இது" அவரிடமும் பெருமூச்சே மிஞ்சியது.

திடீரென "எல்லாரும் கெடுத்திட் டாங்க" உரத்துச் சொல்ல, நாங் களும் அவரின் முகத்தைப் பார்த் தோம். எதைச் சொல்கிறீர்கள்... என் பது போல எங்களின் பார்வை இருக்க சங்கரமடத்தில இருக்கிற ஜெயேந் திரரோ, விஜேந்திரரோ காஞ்சிபுரத் தைச் சேர்ந்தவர்களல்ல. எங்கிருந்தோ வந்தவங்க.

வந்தவங்களால நம்ம ஊருக்கு இப் படியாப் போச்சுங்க. புண்ணிய பு,மி. இருந்தாரு பெரியவர் அவருக்குப் பிறகு இம்... நல்லவங்க கிடைக்கவே கிடைக்கல.

சங்கரமடத்தைப் பார்க்கச் சென்ற நமக்கு சங்கரமடம் பற்றிய விமர்சனங் களையே கேட்க முடிந்தது.

### வரதராஜப் பெருமாள் கோவில்

காஞ்சிபுரத்தில் சங்கரமடமும் பார்த் தாயிற்று. இனிப்பார்க்க வேண்டியது வரதராஜப் பெருமாள் கோவிலே. சங் கரராமன் இந்த ஆலயத்தில் வைத்தே கொல்லப்பட்டார். மிகப் பிரமாண்டமான கோவில். கோவிலுக்குத் தென்புறத்தில் மிகப்பெரிய கேணி. கருங்கல் மண்ட பங்கள். மூலஸ்தானத்தில் ஸ்ரீவை குண்டப் பெருமான் ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராய் காட்சி தருகின்றார்.

வரதராஜப் பெருமாள் கோவிலின் மேலாளராக இருந்த சங்கரராமன் ஆலயத்தின் எந்தப் பகுதியில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டார் என்பதை அறியும் ஆவல் மேலெழுந்தாலும் அதை யாரிடம் கேட்பது.

ஆலயத்திற்கு வருகின்றவர்கள், ஆலய அந்தணர்கள் எல்லோரையும் பார்க்கினற போது எதையோ பறிகொடுத் தவர்கள் போலவே அவர்கள் காட்சி கொடுத்தனர். இது தெரிந்த விடயத்தின் மனப்பிரமையாகக் கூட இருக்கலாம்.

ஆலயத்தின் வீதியில் உட்கார்ந்தி ருந்த ஒருவரிடம் குரல் கொடுத்தோம். ஐயா, சங்கரராமன் இங்க தானே ! மேலாளராக இருந்தார்... ஆமா அதுக் கென்ன இப்போ! அவர் கேட்ட கேள்வி, சங்கரராமனின் நிலை நமக்கும் வந்து விடுமோ என்ற பயத்தை ஏற்படுத்தி யது. இருந்தாலும் எம்மை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு இல்ல... அவர் ... ஆலயத்தில... எங்க இருந்தார்... நாங்கள் எதை எதிர்பார்க்கின்றோம் என்பதைப் புரிந்துகொண்ட அந்தப் பெரியவர் அதோ... தெரிகிறதே கட்ட டம் அதுதான் ஆலயத்தின் அலுவல கம். அங்கதான் சங்கரராமன் இருந் தார். அங்கதான் வெட்டும் விழுந் தது... அங்கதான் உயிரும் பிரிந்தது. அந்தப் பெரியவரின் கண்கள் கலங் கின. அப்பாடா! சங்கரராமன் கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்றோம்.

### அந்தணர்களின் நிர்வாகம்

காஞ்சிபுரம், கோவில்களின் தலை நகரம் மட்டுமல்ல அது அந்தணர்களின் இருப்பிடமும் கூட. காஞ்சி சங்கரமடத் தின் கீழ் இயங்கும் எல்லா ஆலயங்களி லும் அந்தணர்களே நிர்வாகம் செய் வர். வரதராஜப் பெருமாள் கோவிலின் முன்றலில் ஐந்தாறு அந்தணர்கள் பிர சாதம் விற்றுக் கொண்டிருந்தனர். பார்க்கவே அதிர்ச்சியாக இருந்தது. நம்ம நாட்டில் அந்தணர்களின் செயற் பாடு எவ்வளவோ மேலானதென்ற முடிவை தமிழகப் பயணத்தின் பின்னர் எடுக்கக் கூடியதாக இருந்தது.

பிரசாதம் விற்கும் அந்தணர்களைக் கடந்து வரதராஜப் பெருமாள் கோவில் அலுவலகக் கட்டடத்திற்குச் சென் றோம். அந்தண நிர்வாகிகள் அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தனர்.

அந்த நேரத்தில் எங்களுடன் பயணம் மேற்கொண்ட தம்பி இராஜேஸ் வரன் அலுவலகத்தைப் படமெடுக்க முற்பட்டார். ஏற்கனவே ஊடகவியலா ளர்களின் கடுமையான தொந்தரவுக்கு ஆளாகியிருந்த அவர்கள் கோபாவேஷம் கொண்டனர்.

நிலைமையை சமாளிப்பதில் ஆசிரியர் கணேசமூர்த்தி அவர்கள் கச்சிதமாகச் செயற்பட்டார். தமிழகத்திற்குச் சென்ற சிலநாட்களிலேயே தமிழ் நாட்டவர்கள் போலக் கதைப்பதில் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். அதனால், அவரின் முயற்சி வெற்றி கண்டது.

அலுவலகத்திற்கு வெளியில் நின்று படமெடுக்குமாறு கூறினார்கள்.

பூசை நேரத்திற்குரிய கோலத்து டன், மேலாடையின்றி கதிரைகளில் இருந்தவாறு அந்தணர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்குப் புதிதாக இருந்தது. கிரியை வழிபாட் டில் மட்டும் சிவாச்சாரியக் கோலத்



ஜெயேந்திரர்

தைப் பார்த்த நமக்கு, சிவாச்சாரிய கோலத்தில் நிர்வாகம் நடத்துவதைப் பார்க்கும் போது ஆச்சரியம் ஏற்படுவது நியாயமானதே.

எங்கு பார்த்தாலும் அந்தணர்கள். அறிஞர் அண்ணாத்துரை திராவிட முன் னேற்றக் கழகத்தை ஏன் ஆரம்பித்தார் என்பதற்கு விளக்கம் கூறுவதுபோல இருந்தது.

**என். விஜயன்**

### அந்தணர்களிலும் பிரிவு

வரதராஜப் பெருமாள் ஆலயத்திற் குச் சென்ற பின்னரே அந்தணர்களிலும் இரு பிரிவு உண்டென்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. வரதராஜப் பெரு மாளுக்கு பூசை செய்பவர்கள் நெற்றி யில் நாமம் போட்டிருந்தார்கள். அதே நேரம் கோவில் நிர்வாகத்தை நடத்து பவர்கள் திருநீறு அணிந்திருந்தார்கள்.

நம்ம நாட்டில் சிவன் கோவிலாக இருந்தாலும், பெருமாள் கோவிலாக இருந்தாலும் அந்தணர்கள் திருநீறு அணிந்துகொள்வார்களே தவிர நாமம் போடுவது கிடையாது.

இதன் காரணமாக நாமம் அணிப வர்களுக்கும், திருநீறு தரிப்பவர்களுக் கும் உள்ள வித்தியாசம் என்னவென் பதை அறிய வேண்டும் போலிருந்தது.

ஆலயத்திற்கு வழிபட வந்த ஓர் இளைஞனிடம் கேட்டோம்.

நெற்றியில் நாமம் போட்டவர்களை "ஐயங்கார்" என்றும் திருநீறு தரிப்பவர் களை "ஐயர்" என்றும் அழைப்பதாக அவர் கூறினார்.

ஐயரும், ஐயங்காரும் அந்தணர்களில் இருவேறு பிரிவினர் என்பதைப் புரிய முடிந்தது.

அப்படியானால் கொலை செய்யப்பட்ட சங்கரராமன் ஐயரா? ஐயங்காரா? என் பதை அறிவதில் ஆர்வப்பட்டோம்.

(வளரும்)

## இரட்டைத் தலை அபூர்வ குழந்தை

கெய்ரோவில் இரட்டைத் தலை அபூர்வ குழந்தையின் ஒரு தலை சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.



எகிப்து தலைநகர் கெய்ரோவில் கடந்த வருடம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி இரட்டைத் தலையுடன் ஒரு அபூர்வ பெண்குழந்தை பிறந்தது.

பொதுவாக இரட்டையராகப் பிறக்க வேண்டியவர்கள் கோளாறு காரணமாக ஒட்டிப் பிறப்பதுண்டு. சியாமிஸ் இரட்டையர் கள் என இவர்களை அழைப்பார்கள். ஒரு சில சமயங்களில் இவர்களைப் பிரிக்க முயற்சி செய்து வெற்றி பெறு வதும் உண்டு.

எகிப்தில் பிறந்த குழந்தையைப் பொறுத்தமட்டில் இரண்டு பிறவிக ளாக உருவாக வேண்டிய கரு போதிய வளர்ச்சி இல்லாமல் இரண்டு தலை ஒரு உடலுடன் பிறந்தது. உலகில் இதுவரை இது போல் 10 குழந்தைகளே பிறந்துள்ளதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுவரை எந்தக் குழந்தையும் பிழைத்ததில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இரட்டைத் தலையுடன் பிறந்த 'மனால் மேகட்' என்ற பெண் குழந்தைக்கு பென்கா நியோநேடல் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு ஒரு தலை பிரித்து எடுக்கப்பட்டது.

டாக்டர் நசிப் ஹெப்னாவி தலைமையில் மருத்துவர் குழு ஒன்று இந்த அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. தற்போது மனால் நலமாக இருக்கிறாள். மத்திய கிழக்கு நாடுகளில் இதுபோன்ற அறுவைச் சிகிச்சை செய்யப்படுவது இதுவே முதன்முறை என்று கூறப்படுகிறது. (ற)

## வர்த்தகக் குழு லிபியா விஜயம்

(கொழும்பு)

லிபியாவில் வளர்ச்சியடைந்து வரும் சந்தைகளில் விற்பனை வாய்ப்புகளை ஆராய்வதற்கென இலங்கையிலிருந்து வர்த்தக தூதுக்குழு ஒன்று அண்மையில் அந்த நாட்டுக்கு விஜயம் செய்தது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் இந்த விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது. லிபியாவில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதால் அந்த நாடுகளுக்குச் சென்ற வர்த்தக தூதுக் குழுவில் எண்பது சதவீதமானோர் தேயிலை வர்த்தகத்தில் ஈடுபடு வோரில் அடங்கியிருந்தனர்.

அந்த நாட்டின் தேயிலை வர்த்தகக் கட்டுப்பாட்டு நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இலங்கைத் தூதுக் குழுவினர் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். பொதுவாக வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதில் தூதுக்குழுவினரின் இந்த விஜயம் பெரு வெற்றியை வழங்கியுள்ளதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ-5)

# மாணவர் பலத்தினை உலகறியச் செய்ய

# மாணவர் எழுச்சி தினத்தில் ஒன்றிணையுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர் எழுச்சி தினத்தை மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சியுடனும் அனுஷ்டிக்க அனைத்து தமிழ் மாணவர்களையும் ஒன்றிணையுமாறு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயம் குறித்து ஒன்றியம் விடுத்துள்ள அழைப்பு அறிக்கையில்,

எதிர்வரும் ஜுன் 02ஆம் திகதியில் தமிழ் மாணவர்களது எழுச்சி உலகெங்கும் பிரகடனப்படுத்தப்படவுள்ள நிலையில் எம்மண்ணை ஆக்கிரமித்துள்ள அந்நிய ஆக்கிரமிப்புப் படையிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் மாணவர்களாகிய நாங்கள் எமது மாணவர் எழுச்சி தினத்தை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளோம்.

எமது தாயகப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்கள், விவசாய நிலங்கள். வழிபாட்டிடங்கள் மட்டுமன்றி பல பாடசாலைகளும அரச படைகளால் முடக்கப்பட்டுள்ளன. இந்நிலை வெகு விரைவாக மாற்றப்பட வேண்டும். இது எமது கோரிக்கைகளில் முதன்மையானது. குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஓரிரு பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லைப்பகுதியில் இயங்கினும் கூட அவை பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. அவர்களின கற்றல் செயற்பாடுகளும் பிற செயற்பாடுகளும் ஒழுங்காகவும் சுதந்திரமாகவும் முன்னெடுக்கப்பட முடியாதுள்ளது.

இதுதவிரவும் எமது பிரதேசத்தில் உள்ள பல பாடசாலைகளைச் சுற்றிலும் ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக முள்வேலிகளும் காவலரண்களும் படைமுகாம்களும் உள்ளமை எமது மாணவர்களின் மத்தியில் சிறைப்பட்ட மனப்பான்மையை ஊக்குவிக்கின்றன. இது சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்ற செயற்பாடுமாகும். இந்நிலையும் மாற்றப்படவேண்டும்.

தமிழ் மாணவர்களுக்கான தமிழ்மொழியில வெளியாகும் இலவச அரச துணைப்பட நூல்கள் பல குறைகளைத் தாங்கியவண்ணமே எமது மாணவர்களை வந்தடைகிறது. அதாவது தமிழ் சொற்பிழைகள், பொருட்பிழைகள் இவற்றில் அதிகம் உள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசிடம் இதுபற்றி பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதும், இதனை அரசு கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆகவே, இதனை திட்டமிட்ட ரீதியான மொழி அழிப்பு என்றே நாம் கருதமுடியும். மேலும் தமிழ்ப் பாடநூல்கள் போதுமான அளவிறகு எமது பிரதேசங்களிற்கு வந்து சேரவில்லை. கிராமப்புறப் பாடசாலைகளில் தமிழ் மாணவர்கள் பலர் ஒரு சில நூல்களையே பயன்படுத்தி தமது கற்றலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றிற்கு விரைவில் முடிவு கட்டப்பட வேண்டும்.

இவற்றினை விட தாயகப்பிரதேசத்தில் இருந்து தேசிய மட்டத்திலான கல்வி, விளையாட்டு சம்பந்தமான போட்டிகளில் கலந்து கொள்ளும் தமிழ் மாணவர்களிற்கு சிங்கள மொழி மூலமான வழிநடத்துதல்கள் மட்டுமே கொடுக்கப்படுகினறன. இதன் காரணமாக எமது மாணவர்கள் தோல்வியைத் தழுவிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அண்மைக் காலங்களில் கூட இத்தகைய சமபவங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது விசனத்தையும் வெறுப்பையும் தெரிவித்துள்ளனர். இனியும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாதிருக்க சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சரியான முறையில் செயற்பட வேண்டும.

எமது தாயக பூமியில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பல மாணவர்கள் தமது கல்வியைப் பூரணமான முறையில் தொடர்வதற்கு முடியாத நிலையில உள்ளனர். அவர்களுக்கு அரசு தானும் உதவி செய்வதாக இல்லை. உதவி செய்பவர்களுக்கு ஆதரவளிக்கும் நிலையிலும் இல்லை. குறிப்பாக, எமது தாயகப் பிரதேசத்திற்கு உதவிகள் கிட்டுவதற்கு ஏதுவானதும் முக்கியமானதுமான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் பெருத்த ஏமாற்று நடவடிக்கைகளையும் உலக நாடுகளுக்குக் காட்டும் வகையிலான வெறும் கணதுடைப்பு முயற்சிகளையுமே மேற்கொணடு வருகிறது.

இதயசுத்தியுடன் செயற்பட்டு விரைந்து எமது தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மாணவர்களுக்கும் மனிதாபிமான ரீதியிலான உதவிகளை வழங்குவதற்குக் கூடப் பின்னடித்து தனது கீழ்த்தரமான நடவடிக்கைகளையும் இனப்பாகுபாட்டினையும் மதப் பாகுபாட்டினையும் எம்மீது திணித்து வருகின்றது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமாயின் அது நிச்சயமாக சுமூகமான நிலையை மாற்றியமைத்துவிடும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆகவே, இத்தகைய பிரச்சினைகளுக்கு அரசு விரைந்து தீர்வு காணவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

இவற்றிலும் மேலாக தமிழ் மாணவர்கள தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் ஏன் அதற்கும் மேலாக திட்டமிட்ட வகையில் கொலை செய்யப்படுவதும் எமது பிரதேசத்தில் மலிந்து வருகின்றது. உலகில் எந்த ஒரு தேசத்தின் இராணுவமும் மேற்கொள்ளாத கேவலமான கீழ்த்தரமான திட்டமிட்ட ரீதியிலான அணுகுமுறைகளை அந்நிய ஆக்கிரமிப்பு அரச படைகள் அரங்கேற்றி வருகின்றன. இது ஒட்டுமொத்த சமுதாயத்தையே ஆத்திரமூட்டும் செயற்பாடாகும் இதை நாங்கள் ஒருபோதும அனுமதிக்கப்போவதில்லை. மாணவர்கள் ஒன்று திரண்டு இத்தகைய சம்பவங்கள் இடம் பெறும் சந்தர்ப்பங்களில் தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் அமைதிப்போராட்டம் மூலம் காட்டிவருகின்றனர்.

அண்மையில் மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் தமிழ் மாணவர்கள் மீது அரசபடைகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலிற்கு மாணவர்கள் பெரும் கண்டனத்தையும் அமைதி வழிப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர். இனியும் இத்தகைய தாக்குதல்கள் தொடரும்பட்சத்தில் எமது அமைதி வழிப் போராட்டங்களை அரசு மதிக்கவில்லை என்றே கொள்ளமுடியும்.

அதற்காக தமிழ் மாணவர்கள் அடங்கி விடப் போவதில்லை. தியாகி பொன் சிவகுமாரன் முதல் தமிழ் மாணவர்களின் விடுதலை வேடகையை வரலாறு கூறும். எதிரியும் அறிந்திருப்பான்.

இருப்பினும், எமது இனத்தின் மாணவ சமுதாயத்தை திட்டமிட்ட முறையில் அழிப்பதன் மூலம் எமது எதிர்காலச் சமுதாயத்தை சீர்குலைத்து எதிரியானவன் எம்மைப் பலமிழக்கச் செய்ய முனைகிறான். அதாவது இளஞ் சமுதாயத்தின் பாரிய கலாசாரச் சீர்கேடுகளின் பினனணியை நாம் நோக்கும்போது அங்கு எதிர்ப் படையின் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களின் அரவணைப்புக்குள் வாழும் அவர்கள் போடும் எச்சில் துண்டுக்கு வாலாட்டும் துரோகிகளுமே காணப்படுகின்றனர்.

எனவே, இத்தகைய பிரச்சினைகளில் இருந்து எமது சகோதர மாணவர்களை வெளிக்கொணர்ந்து அவர்கள எதிர்கொள்ளும் சவால்களை நாமும் இணைந்து எதிர்கொண்டு நல்லதொரு தீர்வு காண முற்பட வேண்டும்.

* எமது தாயக பூமியில் அதி உயர் பாதுகாப்பு வயலம் எனும் போர்வையில் முடக்கப்பட்டுள்ள எமது பாடசாலைகள் அனைத்தும் விரைந்து சுதந்திரமான கற்றலுக்காக திறந்து விடப்படவேண்டும்.

* தமிழ் மாணவர்கள் சிறப்பாகவும் தடையின்றியும் தமது கல்விச் செயற்பாடுகளையும் பிற செயற்பாடுகளையும் முன்னெடுக்க ஆதரவாக உரிய அரச திணைக்களங்கள் செயற்படவேண்டும்.

* ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் திறம்பட தமது செயற்பாடுகளை மீளமைத்துக்கொள்ள ஏற்றவகையில அவர்களுககு உதவக்கூடியவர்களோடு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி அவர்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* மாணவர்கள் மீதான தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் விபத்துப் பாணியிலான கொலைகளும் கொலை முயற்சிகளும் விரைந்து முடிவுகட்டப்படவேண்டும்.

எனவே மேற்படி கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்க இம்முறை மாணவர் எழுச்சி தினத்தை அனைத்துத் தமிழ் மாணவர்களும் மிகவும் உணர்வுபூர்வமாகவும் மிகவும் எழுசசியுடனும் ஒன்று திரண்டு எமது பலத்தினை உலகறியச் செய்ய வேண்டுமென அழைப்பு விடுகின்றோம். இது ஒவ்வொரு தமிழ் மாணவனினதும் கடமையும் ஒரு நல்ல சந்தர்ப்பமும் ஆகும். (ற)

## விண்வெளி குப்பைகளால் பேராபத்து!




விண்வெளியில் சுற்றிவரும் குப்பைகளால் ஆபத்து விளையுமா என்ற கேள்விக்கு விஞ்ஞானிகள் பதில் கூறியுள்ளனர்.

1957ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா முதன் முதலில் விண்வெளியில் ஸ்புட்னிக் என்ற விண்கலத்தை ஏவியது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, இந்தியா என பல நாடுகள் விண்வெளியில் ராக்கெட்டுகளை அனுப்பி வருகின்றன. செயற்கை கோள்களை ஏவி வருகின்றன. இந்த செயற்கை கோள்கள் ஒரு சில வருடங்களே செயல்படும். பின்னர் அவை காலாவதியாகிவிடும். இவைகள் விண்வெளி குப்பைகள் எனப்படும். இதுதவிர ராக்கெட்டிலிருந்து வீசி எறியப்படும் பொருட்கள், செயற்கைகோள்களிலிருந்து பிரிந்து செல்லும் சோலார் தகடுகள், நட்டுகள், போல்ட்டுகள் யாவும் விண்வெளியில் 25000 கி.மீ வேகத்தில் பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. விண்வெளியில் இதுபோல் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குபபைகள் இருக்கலாம் என நாசா எச்சரித்துள்ளது.

இதில் 1 மி.மீ அளவுள்ள பொருள் பூமிக்கு வந்து யாரையாவது தாக்கினால் அது துப்பாக்கி குண்டு பாய்ந்ததற்கு சமம் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும் இந்த விண்வெளிக் குப்பைகள் கடலில் விழுந்து விடுவதால் நமக்குப் பாதிப்பில்லை (ற)

## கோதுமை மாவின் விலை வெகுவாக வீழ்ச்சியடையும்

(கொழும்பு)

சந்தையில் கோதுமை மாவின் விலை வெகுவாக வீழ்ச்சியடையும் போக்கு தென்படுகிறது.

கோதுமை மா இறக்குமதியிலும் விநியோகத்திலும் பிறீமா நிறுவனத்துக்கு ஆண்டாண்டு காலம் நிலவிய ஏகபோகம் நீக்கப்பட்டிருப்பதுவே இதற்குக் காரணம்.

பிறீமா நிறுவனம் 7ரூபா 50 சத மானியத்தைப் பெற்று ஒரு கிலோ கோதுமை மாவை 30 ரூபா உச்ச விலைக்கு விற்பனை செய்தது.

அந்த அமைப்பு தற்போது ஒரு கிலோ கோதுமை மாவை 20 முதல் 22 ரூபா இடையபட்ட விலையில் விற்பனை செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

பிறீமா நிறுவனத்தின் ஏகபோகம் நீக்கப்படடதைத் தொடர்ந்து தனியார்துறை கோதுமை மாவை இறக்குமதி செய்துவருகின்றது.

அவை ஒரு கிலோ 19 அல்லது 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும் விலை குறைப்பின் பயன்கள் நுகர்வோரைச் சென்றடையவில்லை.

பேக்கரி உரிமையாளர்களும் உணவு விநியோகஸ்தர்களும் அதிக இலாபம் சம்பாதிக்க முயல்வதால் கோதுமை மாவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

நுகர்வோர் அதிகாரசபை இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். (ற-5)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அரசறிவியல் ஒன்றியத்தின் வருடாந்த செயற்பாடுகளில் ஒன்றான கருத்தரங்கு தொடர் I இல் பொருளியல்துறை தலைவரும் பொருளியல் பேராசிரியருமான வி.நித்தியானந்தம் “இலங்கையில் சமாதானமும் பொருளாதாரமும்” என்ற தலைப்பில் இன்று புதன்கிழமை பி.ப.3.00மணிக்கு பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் கருத்துரை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (ற)

## வெட்கப்பட்டால் ஆயுள் குறையுமாம்

வீட்டிற்குப் புதிதாக வரும் உறவினர்களிடமோ, நண்பர்களிடமோ குழந்தைகள் பேசாமல் ஒதுங்கி நின்றால், அவனுக்கு கொஞ்சம் கூச்ச சுபாவம் தப்பாக நினைக்காதீர்கள் என்று வெறுமனே கூறிவிட்டு மற்ற விசயங்களைக் கவனிக்கச் செல்லும் பெற்றோர்களே! உங்களுக்கு எசசரிக்கை விடுக்கும் வகையில் ஒரு தகவலை வெளியிட்டுள்ளனர் சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

வெட்கம், கூச்சம் அதிகமாக இருந்தால் ஆயுள் குறையும் என்கிறார்கள் அப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளான சோனியா கேவி கேலி, மார்தா மெக்லி கண்டாக் ஆகியோர்.

கூச்சம், பயந்த சுபாவம் அதிகம் உள்ள நபர்களை ‘நியோபோபிக் மனிதர்கள்’ என்றும், யாரிடமும் கலகலப்பாக பேசும் தைரிய குணமுடைய மனிதர்களை ‘நியோபிலிக் மனிதர்கள்’ என்றும் உயிரியல் விஞ்ஞானிகள் வகைப்படுத்தியுள்ளனர்.

இதில் நியோபோபிக் மனிதர்களுக்கு நியோபிலிக் மனிதர்களைவிட 60 சதவீதம் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது என இவ் இரு விஞ்ஞானிகளும் கூறுகின்றனர்.

மனிதர்களுடன் உடலியல் ரீதியாக பல்வேறு விஷயங்களில் ஒத்துப்போகும் எலிகளிடம் ஆய்வுகள் நடத்தி அவர்கள் இந்த உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர்.

எலிகளில் நியோபோபிக் வகையையும் நியோபிலிக் வகையையும் தனித்தனியாக பிரித்து கூண்டுக்குள் அடைத்தனர். பிறகு அதில் பந்து, சமையல் உபகரணங்கள், செங்கல் என்று புதுப்புது பொருட்களை கயிறு மூலமாக உள்ளே காட்டினர்.

நியோபோபிக் எலிகள் நியோபிலிக் எலிகளை விட அதிகம் பயந்து நடுங்கின. பிறகு இரண்டு வகை எலிகளின் வாழ்க்கை சுழற்சியையும் ஆராய்ந்தபோது கூச்சமும், பயமும் கொண்ட எலிகளின் வாழ்க்கை சுழற்சி 599 நாட்களிலும், தைரியமாக, கூச்சமிலலாத எலிகளின் வாழ்க்கை சுழற்சி 701 நாட்கள் வரையும் நீடித்தது.

இவ்வாறு கூச்சகுணம் கொண்ட எலிகளின் ஆயுள் குறைகிறது என்று முடிவு செய்தனர். பிறகு இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் ஆய்வு மேற்கொண்ட போது அங்கேயும் இந்தக் கருத்தை வலியுறுத்தும்படியான முடிவே வந்தது. எனவே கூச்சமும், எதைக்கண்டாலும் பயப்படும குணமும் ஆயுளைக் குறைக்கும் என்று முடிவு செய்தனர்.

இதற்கு கூச்ச சுபாவம் உள்ளவர்களிடம மன அழுத்த ஹோர்மோன் அதிகமாக சுரப்பதே காரணம் என்பதையும் அவர்கள் கணடு பிடிததனர். கூச்ச சுபாவிகளே! உங்கள் குணத்தை கொஞ்சம் மாற்றி ஆயுள் நீடிப்புப் பெறுங்கள். (ற)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:10 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - II நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

- இவ்வினாத்தாளில் 22 வினாக்கள் உள்ளன.
- தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- கூட்டுக்குள் தரப்பட்டுள்ள பந்தியைக் கவனமாக வாசித்து விடை எழுதுக.

அன்பு தான் மகாசக்தி. எல்லா உயிர்களும் அன்பை விரும்புகின்றன. நாமும் எல்லோரும் எம்மீது அன்பாக இருக்கவேண்டும், அன்பாகப் பேசவேண்டும், பழக வேண்டும் என்று விரும்புகின்றோம். அதேபோல் ஏனையோரும் எம்மிடம் அன்பை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் சில வேளைகளில் நாம் ஏனையோர் மனங்கள் நோகும்படி சொற்களைப் பாவித்து ஏசுகின்றோம். அன்பு கெடும்படி நடந்து கொள்கின்றோம். இது கூடாத செயல். நாங்கள் எம் அம்மா அப்பாவில்... ஆசிரியரில்... அயலவரில்... எல்லோரிலும் அன்பாய் இருத்தல் வேண்டும்.

**(01)பந்தியின் பிரகாரம் கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "✔" எனவும் பிழையாயின் "X" எனவும் புள்ளிக்கோட்டில் அடையாளம் இடுக.**

(i)இப்பந்தி மூலம் சொல்லப்படும் கருத்து உயிர்களில் அன்பாக இருகக வேண்டும் என்பதாகும். [------------]

(ii)நாம் ஏனையோரிடம் அன்பை எதிர்பார்க்கலாம். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கக்கூடாது. [------------]

(iii)நாம் வளர்க்கும் விலங்குகளில் கூட நாம் அன்பாக இருக்கவேண்டும். [------------]

**(02)கீழே சில சொற்கள் உண்டு. அவற்றை அன்பான நல்ல சொற்கள் எனவும், அன்பற்ற கூடாத சொற்கள் எனவும் வகைப்படுத்தி கீழே உள்ள கூட்டை நிரப்புக.**

தம்பி, செவிடன், படியுங்கள், போடி, அம்மா, ஐயா !, மலடி, தடியன், மூதேவி, போய் வாருங்கள்

| | | |
|---|---|---|
| (i) | அன்பான நல்ல சொற்கள் | |
| (ii) | அன்பற்ற கூடாத சொற்கள் | |

(iii)சில உணர்வுகளுக்கு நாம் உள்ளாகும் போது அன்பற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம். அத்தகைய ஒரு உணர்வை எழுதுக.
[--------------------------------------------------------------------]

**(03)கீழே உள்ள கூட்டினுள் உள்ளவை எமக்குள் ஏற்படும் சில உணர்வு மாற்றங்களாகும். இவற்றைத் தொடர்ந்துவரும் வினாக்களில் பொருததமானவற்றிற்கு நேரே எழுதுக.**

கோபம், அழுகை, சந்தோஷம், ஏமாற்றம்

(i)நாம் அன்பு வைத்துப் பழகிய ஒருவர் எம்மை விடடு விலகி வேறோர் இடம் செல்லும்போது எமக்குள் ஏற்படுவது [----------------]

(ii)புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ஒருவரில் ஏற்படும் உணர்வு [----------------]

(iii)தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் எனும நோக்கோடு கடுமையாகப் படித்தும் 1 புள்ளியால் புலமைப்பரிசில் கிடையாது போகும் ஒருவரின் மனதில் ஏற்படும் உணர்வு [----------------]

(iv)தான் செய்வது தவறு எனத் தெரிந்து கொண்டும் தவறைச் செய்த ஒருவரில் ஏனையோருக்கு ஏற்படும் உணர்வு [----------------]

**(04)கீழே உள்ள கூட்டினுள் உள்ளவை சில தீய நடத்தைகளாகும். இவற்றால ஏற்படும் பாதிப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இப்பாதிப்புக்களுடன் தொடர்புபடும் தீய நடத்தைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

மது அருந்துதல், புகைப் பிடித்தல், களவெடுத்தல், பொய்கூறல்

(i)அன்பற்ற கூடாத வார்த்தைகளைக் கூறுதல், வீண் சண்டைக்குச் செல்லுதல். [------------------------]

(ii)சுவாச நோய்கள், இருதய நோய்கள் ஏற்படுதல். [------------------------]

**(05)மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(i)கீழ்வருவனவற்றுள் பன்மைச் சொல் எது?
(கதிரை, புத்தகம், பறவை, மீன்கள்)

(ii)கீழ்வருவனவற்றுள் "அவர்கள்" என்னும் சொல்லுடன் சோந்து வாக்கியம் ஒன்றை நிறைவு செய்யும் சொல் எது?
(வந்தான், வருவான், வருவார்கள், வருவீர்கள்)

(iii)"வருவான்" என்னும் சொல் எக்காலத்தில் அமைந்துள்ளது.
(எதிர்காலம், இறந்தகாலம், நிகழ்காலம், கூறமுடியாது)

**(06)கீழே உள்ள கூட்டினுள் சில சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றோடு தொடர்புடைய சில சொற்கூட்டங்கள் கீழே உண்டு. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தி எழுதுக.**

தபால்சேவை, முஸ்லிம்கள், நோயாளர்கள், கிறிஸ்தவர்கள், ஒருவருடம்.

(i)தேவாலயங்கள் [------------------------]

(ii)கடிதம், தந்தி, முத்திரை [------------------------]

(iii)பள்ளிவாசல்கள் [------------------------]

(iv)வைத்தியர்கள், தாதிகள், மருந்தாளர் [------------------------]

(v)52 வாரங்கள் [------------------------]

**(07)மக்கள் வாழுமிடங்களைக் கொண்டு அவர்களை அழைக்கும் பெயர்கள சில உள்ளன. கீழ்வரும் மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக.**

(i)வீடு, வாசல்களை இழந்து வெளியேறியோர் [---------------]

(ii)காட்டில் வாழும் மக்கள் [---------------]

(iii)நாடு விட்டு நாடு நகர்ந்து வாழ்வோர். [---------------]

**(08)பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

(i)உடன் மீன் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்படுகிறது. இதற்கான காரணம
1)ஈக்கள் மொய்ப்பது தடுக்கப்படும என்பதால்
2)மீனைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பொருத்தமான இடம் என்பதால்
3)மீனைப் பழுதடையாமல் பேணுவதற்கு

(ii)புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு
1)கல்விப் போதனை செய்யும் இடமெல்லாம் போய்க் கற்றல் வேண்டும்.
2)பாடசாலை, விளையாட்டு, நண்பர் எனச் சந்தோசமாக இருத்தல் வேண்டும்.
3)மிகவும் ஒழுங்காகவும் அமைதியாகவும் தினமும் படித்தல் வேண்டும்.

(iii)தாவர உணவுகளை உண்பதன் மூலம்
1)உடம்பு இறுகிப் பலமாகும்.
2)மலச்சிக்கல் ஏற்படுவது குறையும்.
3)பொருளாதாரத்தைச் சிக்கனப்படுத்தலாம்.

(iv)நுளம்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பருவம்
1)பறக்கும் பருவம்.
2)புழுக்களாக இருககும் பருவம்.
3)முட்டைகளாக உள்ள நிலை.

(v)நீருள் நுளம்பு உற்பத்தியாதலைத் தடுக்க செய்யக்கூடிய சிறந்த முறை
1)எண்ணெய் இடுதல், சுடுநீர் ஊற்றுதல்
2)நுளம்பின் முட்டை, புழுப்பருவம் என்பனவற்றை உண்ணும் மீன்களை வளர்த்தல்
3)நுளம்புச்சுருள், கிருமிநாசினி என்பவற்றைப் பாவித்தல்.

**(09)கீழே சில கூற்றுக்கள் தரப்படுகின்றன. அவை உண்மையாயின் "உ" எனவும் தவறாயின் "த" எனவும் எதிரே எழுதுக.**

(i)பட்டம் விடுதல் புவி மேற்பரப்பில் வளி இருப்பதற்குச் சான்றாகும். [ ]

(ii)முகில்களற்ற பகல் வேளையில் நட்சத்திரங்களை அவதானிக்கலாம். [ ]

(iii)மாவட்ட பரிபாலன அலகு ஒன்றுக்கு அரச அதிபர் பொறுப்பாக இருப்பார். [ ]

(iv)முட்டை ஒரு "நிறை உணவு" ஆகும். [ ]

(v)பல்வேறு நிறக் கடதாசிகளை ஒட்டுதல் கொலாஜ் ஆக்கம் எனப்படும். [ ]

**(10)கீழே சில மண்மாதிரிகள் பற்றிய தகவல்கள் தரப்படுகிறது. இதனை ஆதாரமாக வைத்து மண் வகைகளை இனங்கண்டு அவற்றின் பெயர்களை எழுதுக.**

| மண்மாதிரி | மண்வகை |
|---|---|
| (i)கைக்கு சொரசொரப்பாக இருந்தது | [----------------------] |
| (ii)கைக்கு மிகவும் மென்மையாக இருந்தது | [----------------------] |
| (iii)கறுப்பு நிறமாகவும் கைக்கு ஓரளவு சொரசொரப்பாகவும் இருந்தது. | [----------------------] |


**(11)கீழே சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தமான கூடுகளுள் எழுதுக.**

பயறு, நெல், பனை, பலா

தாவரம்
- ஒருவித்திலைத்தாவரம்
  - உயரமானவை (i) [ ]
  - உயரம் குறைந்தவை (ii) [ ]
- இருவித்திலைத்தாவரம்
  - கொடி (iii) [ ]
  - மரம (iv) [ ]

**(12)மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.**


(i)




இப்படத்தை நன்கு அவதானிக்குக. சிறிது நேரஞ் செல்ல என்ன மாற்றத்தை அவதானிக்கலாம்.
1)பஞ்சு தீப்பிடித்து எரியும்.
2)பஞ்சு மிகவும் குளிர்ந்து போய் இருக்கும்.
3)பஞ்சில் எந்த மாற்றமும் நிகழாது.
4)எதுவும் கூறமுடியாது.

(ii)ஒளியைத் தாமே வெளிவிடும் பொருட்கள் ஒளிமுதல்கள் எனப்படும். கீழ்வருவனவற்றில் ஒளிமுதல் எது?
1)சந்திரன் 2)சூரியன் 3)தளவாடி

(iii)தாவரங்களில் ஒளிபடும்போது இலை பச்சை நிறமாகவும், ஒளி இல்லாத போது இலை மஞ்சள் நிறமாகவும் காணப்படும்.




அருகே உள்ள தாவரக்கிளை கறுப்புத் துணியால் மூடிக்கப்பட்டு 3 நாட்கள் இருட்டில் வைக்கப்பட்டது. பின்னர் துணி நீக்கப்பட்டால் இலைகள்
1)மஞ்சள் நிறமாக
2)பச்சை நிறமாக
3)வாடிக் காணப்படும்.

**(13)கீழ்வரும் எண்களைப் பயன்படுத்தி விடை எழுதுக.**

0.2, 0.25, 0.3, 1, 3.25

(i)இவற்றுள் மிகவும் சிறிய எண் எது? [----------------]

(ii)இவற்றுள் மிகவும் பெரிய எண் எது? [----------------]

(iii)1/4 என்னும் பின்னத்திற்குச் சமமான எண் எது? [----------------]

(iv)இவ்வெண்களைப் பெறுமானம் அதிகரித்துச் செல்லுமாறு ஒழுங்குபடுத்துக. [----------------]

(v)இவ்வெண்களைப் பெறுமானம் குறைவடைந்து செல்லுமாறு ஒழுங்குபடுத்துக. [----------------]

(0? ஆம் பக்கம் பார்க்க...)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்


### வினாத்தாள் இல:08


**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01.சு.றஞ்சினி - யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி.
02.பு.பிருந்தாபன் - யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி.
03.ஜெ.மதுடினா - யா/சோதி வேம்படி மகாவித்தியாலயம்.
04.ர.கிருபரன் - யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
05.K.S.அலெக்ஸ் - யா/மத்திய கல்லூரி.
06.சு.நிஷாமினி - யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
07.சி.மணிமாறன் - யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
08.ர.கீர்த்திகேசன் - யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
09.கி.மாதுளா - யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.
10.ச.நிருசிகா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
11.ஜெ.சுஜனிகா - யா/மானிப்பாய் மெமோரியல் நவோதயா கல்லூரி.
12.ஸ்ரீ.ஸ்நேகா - யா/மானிப்பாய் றோ.க.த.க பாடசாலை.
13.செ.லோசியன் - யா/பருத்தித்துறை சித்திவிநயாகர் வித்தியாலயம்.
14.செ.துவாரகா - யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்.
15.சி.கவிஜா - யா/சோதிவேம்படி வித்தியாசாலை.
16.க.சங்கீதா - யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
17.ஸ்ரீ.பிரசாத் - யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்.
18.அ.சர்மிஜா - யா/ஏழாலை றோ.க.த.க. பாடசாலை.
19.பா.அஜிகரன் - யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்.
20.அ.றொஷாணி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
21.பி.சகானா - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
22.செ.சுலக்சன் - யா/மானிப்பாய் விவேகானந்தா கல்லூரி.
23.கு.சரண்யா - யா/ஞானசாரியார் கல்லூரி.
24.பு.பிரியதர்சன் - யா/நவாலி மகாவித்தியாலம்.
25.ஜெ.நிதர்சி - யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்.
26.சு.லக்ஷனா - யா/இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை.
27.தி.திவ்வியா - யா/ஞானசாரியார் கல்லூரி.
28.மு.விமலோசிகா - யா/ஞானசாரியார் கல்லூரி.

## வினாத்தாள் 08 இன் விடைகள்

**01.** i) (2) ii) (2) iii) (3) iv) (4) v) (4)
**02.** i) காடு ii) மரம் iii) உரிய iv) தீங்கு
**03.** i)அழித்தல் ii)தடை iii)நகரம் iv)குறைத்தல்
**04.** i)காடு, இடத்தில், வீட்டை
**05.** ii)அழித்தான்
**06.** i)பெயர்ச்சொல் X ii)வினைச்சொல் X iii)பெயரெச்சம் X
iv)இணைமொழி X v)வினைச்சொல் X
**07.** i)கண் ii)நாக்கு iii)காது iv)தோல் v)மூக்கு
**08.** i)5 ii)3 iii)4 iv)2 v)1
**09.** i)மாடு/பசு ii)கழுகு iii)கோழி iv)மாடு /பசு v)பல்லி
**10.** i) A ii)B iii)A vi) A v)A
**11.** i)பூ ii)திரள்பழம் iii)மரக்கறி வகை iv)எறும்பு v)பாம்பு
**12.** i)தேக்கு,வேம்பு ii)ஐதரில்லா iii)தூதுவளை, றோசா iv)வெள்ளரசு
v)தூதுவளை, வேம்பு
**13.** i)இதயம் ii)சுவாசப்பை iii)மூளை
**14.** (iii)
**15.** i)735ரூபா 00சதம் ii)35 ரூபா 00சதம் iii)10ரூபா 00சதம்
iv)60ரூபா 00சதம் v)1kg 580g
**16.** i)பி ii)ச iii)பி iv)ச v)ச
**17.** i)2030 ii)7 மணி iii) $\frac{5}{9}$

v) 


v) 

**18.** i)வட்டம் ii)சதுரம் iii)முக்கோணம் iv)செவ்வகம் v)பப்படம்
**19.** i)20 ii)10 iii)70 iv)ரூபா 140.00 v)நீலம்
**20.** ◆எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்.
◆கூறியது கூறலாக இருக்கக் கூடாது.
◆தலைப்பிற்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும்.
◆எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 10

**மாணவர் முழுப்பெயர் :** ..................................

**பாடசாலையின் பெயர் :** ..................................

**வீட்டின் முகவரி :** ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 07.06.2005 இற்கு முன் அனுப்பி வைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன் கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)




**(14)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
(i)சமச்சீர் அச்சு ஒன்றினை மட்டும் உடைய கணித உரு எது? [--------------------------]
(ii)இரண்டு சமச்சீர் அச்சுக்களையுடைய கணித உரு எது? [--------------------------]
(iii)மூன்று சமச்சீர் அச்சுக்களையுடைய கணித உரு எது? [--------------------------]
(iv)நான்கு சமச்சீர் அச்சுக்களையுடைய கணித உரு எது? [--------------------------]
(v)பல சமச்சீர் அச்சுக்களையுடைய கணித உரு எது? [--------------------------]



**(15)கீழ்வரும் அலகுகளின் குறியீடுகளில் பொருத்தமானவற்றைப் பயன்படுத்த இடைவெளியை நிரப்புக.**

**kg, km, g, m, ml, l, cm, mm, s**

(i)கமலன் 5................. சீனியை வாங்கினான்.
(ii)கமலி கடையில் $\frac{3}{4}$ .................... துணி வாங்கினாள்.
(iii)வசந்தி 10........ இல் 100........... தூரத்தை ஓடி முடித்தாள்.
(iv)தேக்கரண்டி ஒன்று 15........... திரவத்தைக்கொள்ளும்.
(v)பென்சில் ஒன்று 12 ............ நீளம் உடையது.

**(16)கீழே உள்ள உருக்களில் தரப்பட்டுள்ள பின்னங்களுக்குச் சமமான பகுதியை நிழற்படுத்திக் காட்டுக.**

(i) $\frac{1}{8}$  (ii) $\frac{1}{4}$  (iii) $\frac{1}{2}$ 

(iv) $\frac{75}{100}$  (v) $\frac{10}{30}$ 

**(17)A=10, B = 15, C=5, D=0 என்னும் எண்களை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் சமன்பாடுகளின் பெறுமானம் காண்க.**
உதாரணத்தை அவதானித்து செயற்படுக.
A + B = ☐
10+15 = 25

(i)B - A = ☐ [----------------]  (ii)A xC = ☐ [----------------]  (iii)A + D = ☐ [----------------]

(iv)A x D = ☐ [----------------]  (v)B - D = ☐ [----------------]

**(18)பின்வரும் சிறப்பு இயல்புகளையுடைய கணித உருக்களின் பெயர்களை எழுதுக.**
(i)மூன்று பக்கமும் சமமாய் உள்ள தடடையான கணித உரு. [------------------------]
(ii)நான்கு பக்கமும் சமமாய் உடைய தட்டையான கணித உரு. [------------------------]
(iii)உச்சி, விளிம்பு, முகம் எதுவுமற்ற திண்ம உரு. [------------------------]
(iv)6 முகமும் சமமாய் அமைந்த கணித உரு. [------------------------]
(v)நான்கு முகமும் சமமாய் அமைந்த கணித உரு. [------------------------]

**(19)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**
(i)முதலாவது இரட்டை எண் எது? [------------------------]
(ii)முதலாவது முதன்மை எண் எது? [------------------------]
(iii)முதலாவது ஒற்றை எண் எது? [------------------------]
(iv)10 இலும் குறைந்த சதுர எண்களை எழுதுக? [------------------------]
(v)5 இலும் குறைந்த ஒன்றை எண்களை எழுதுக? [------------------------]

**(20)கீழ்வரும் எண்களில் தடித்த எழுத்தில் உள்ள இலக்கத்தின் இடப்பெறுமதியை எழுதுக.**
(i)5434 [------------------------]
(ii)7235 [------------------------]
(iii)2005 [------------------------]
(iv)12 439 [------------------------]
(v)743 [------------------------]

**(21)கீழ்வரும் திசைகளை எழுதுக.**
(i)சூரியன் உதிக்கும் திசை [---------------]
(ii)சூரியன் மறையும் திசை [---------------]
(iii)வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடைப்பட்ட திசை [---------------]
(iv)ஈசான மூலைக்கு எதிரான மூலை [---------------]
(v)ஈசான மூலைக்கும், அக்கினி மூலைக்கும் இடைப்பட்ட திசை [---------------]

**(22)'கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6.50 மணி இருக்கும். கடல் கொந்தளித்து அலைகள் 10 மீற்றர் உயரம் வரை எழுந்தன...' என்பதைத் தொடர்ந்து சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்கவேண்டும்.**

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 4



இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராகப் புகழ்பூத்த தமிழரான பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே அதன் ஆரம்ப காலமான 1919இலிருந்து 1921 வரை விளங்கினார். அருணாசலம் அவர்களை முதல்வராக முன்னணியில் கொண்டே இலங்கையின் சுதந்திரத்தைப் பெறுவதற்குச் சிங்களப் பெருமக்கள் முயற்சி செய்தார்கள். அருணாசலம் தலைமை தாங்கியதைக் கண்டு ஆங்கிலேயரும் அனுதாபங் கொண்டனர். இக்கால சூழ்நிலையில் ஆளுநராயிருந்த மனிங்கின் தந்திரமும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மனப்போக்குகளில் ஏற்பட்ட சிறுபான்மையினருக்கு ஏதிரான மாற்றங்களும் இணைந்து முதன்முதலில் சுட்டிக்காட்டத்தக்க விதத்தில் சிங்கள- தமிழ் நல்லு றவினைக் கெடுத்துக் கொள்ள வாய்ப்பளித்தன என்று கூறலாம். கொழுமபில் அருணா சலம் விரும்பியபடி தமிழருக்கான பிரதிநிதித்துவத் தொகுதியொன்றினைத் தரமறுத்தும் ஆளுநரின் பிரித்தாளும் கொள்கைக்குப் பலியாகியும் சிங்களத் தலைவர்கள் நடந்து கொண்டனர். அருணாசலம் தான் ஏமாற்றப்பட்டு விட்டதன் நிலையையும் தமிழர்களின் பரிதாப நிலையையும் உணர்ந்து இலங்கைத்தேசிய காங்கிரசிலிருந்து விலகிச் சென்றார். 1921இல் தான் தமிழர்கள் இந்நாட்டில் சிறுபான்மையினர் என்பதை அவரும், அக்காலத் தமிழ்த் தலைவர்களும் உணர்ந்து கொண்டனர். விலகிய அருணாசலமும் ஏனைய தமிழர் களும் தமிழர் மகாசபையை அமைத்துக் கொண்டனர். இலங்கைத் தேசிய மகாசபையோ பெயரள விலான தேசியத்தையும் கரையோரச் சிங்களவரையும் கொண்ட சபையாகத் தன்னை இனங்காட்டி நின்றது.

''தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும்'' தந்திரம் கைவரப்பெற்ற மனிங் அவர்கள் சிங்களவர், தமிழர் ஆகிய இருபகுதியினரையும் திருப்திப்படுத்துவதுபோல் நடித்தார். இருந்தபோதிலும் 1921இன் பின்னர் வழங்கப்பெற்ற முன்னர் அருணாசலத்திற்கு மறுக்கப்பட்ட கொழும்புத்தமிழர் பிரதிநிதித்துவம் அவரது மகனான மகாதேவாவுக்குக் கிடைத்திருந்தாலும் அதற்காக மேலும் இரு பிரதிநிதித்துவங்களைச் சிங்களவருக்கு அவர் வழங்க வேண்டியதாயிற்று. 1920க்கு முந்திய சட்டசபையமைப்பில் சிங்களவருக்கும் தமிழருக்கும் சமபலவாசனங்களிருந்த போதிலும் 1920 இற்குப் பிந்திய காலத்தில் சிங்க ளவருக்குப் பதின்மூன்று ஆசனங்களும் தமிழர்களுக்கு மூன்று ஆசனங்களுமேயே கிடைத்தன.

சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கை அரசியலில் இவ்வினங்களுக்கு இடையே காணப் பட்ட மிக முக்கியமான பிரச்சினையாக் அமைந்தது். பிரதிநிதித்துவமே. சுதந்திரத்திற்கு பின்னர் ஏற்பட்ட .இன ரீதியான பிரச்சினைகளுக்கும் அதுவே பின்னணியாக அமைந்தது. சுதந்திரத் திற்குப்பின்னர் மொழி மதம் போன்றன முக்கியத்துவம் அடைந்து விட்ட போதிலும் இப்பிரதி நிதித்துவப் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படவுமில்லை. அதன் முக்கியத்துவம் குறைந்து விடவுமில்லை. இவ்வாறு அ. சிவராசா எழுதிய கட்டுரையில் கூறியுள்ளமை இங்கு நோக்கத் தக்கதாகும்.

ஒரு காலத்தில் பறங்கியரும் பிரித்தானியருமே இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நாடி நின்றபோது, சிங்களவர்களும் தமிழர்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தையே விரும்பினர் . ஆனால் தழிழரைப் பொறுத்தவரையில் டொனமூர்க்குழுவின் முன்னர் முந்திய தம் நிலையில் இருந்தும் பிறழ்ந்து இனவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலமும் மற்றும் சில விசேட விகிதாசாரத்தின் மூலமும் சிங்களவரிடமிருந்து தமது நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றனர். இனவாரியான பிரதிநிதித்துவத்துக்கு முதலில் வித்திட்ட கோல்புறூக்-கமறொன் சீர்திருத்தமே இனரீதியான பாகுபாட்டினை ஆரம்பித்து வைத்ததெனலாம்.

இலங்கைத் தேசிய மகாசபையில் சிங்களத் தலைவர்களின் நடத்தையானது சிறுபான்மையினரை அவர்களிடத்துச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வைத்த முதல் நிகழ்வு எனினும், அடுத்து ஏற்பட்ட அரசாங்க சபைக்காலப் போக்குகள் மீண்டும் மீண்டும் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தின. 1931 யூன் மாதத்தில் முதலாவது அரசாங்க சபைத்தேர்தல் நடைபெற்ற யாழ்ப்பாணப் பகுதியில் யாழ்ப்பாண மகாசபை, தமிழர் மகாசபை, வாலிபர்லீக் போன்றவற்றின் எழுச்சி காரணமாகத் தமிழரைத் திருப்திப்படுத்தாத அரசியலமைப்பின் கீழான தேர்தலைப் பகிஷ்காரஞ் செய்ததில் 4 தொகுதிகள் வெற்றிடமாயின. மீண்டும் 1934 இன் பின்னர் நிலையை மாற்றி இடைத்தேர்தலில் அவ்விடங்கள் நிரப்பப்பட்டன. இரண்டாவது அரசாங்க சபைத் தேர்தலானது 10.03.1936 இல் நிறைவு பெற்றதும் திட்டமிட்டபடி அமைக்கப்பட்ட தனிச்சிங்கள அமைச்சரவையானது சிறுபான்மையோரைப் பொறுத்தவரையில் மேலும் பாதகமான விளைவுகளையே வருவித்தது. நன்நோக்குப்படைத்த சில பெரும்பான்மையினத் தலைவர்களது முயற்சியினால் இக்குறைபாட்டை ஓரளவுக்கேனும் நிவிர்த்தி செய்யசேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடவேண்டியதாகும். இக்கட்டத்தில் ஆள்பதி ஆதர்கோடன் அவர்கள் இலங்கையர் பொறுப்பாட்சிக்கு அரியபாடுபட்டபோது கூறிய கருத்து சிந்தனைக்குரியது. பொறுப்பாட்சியை இலங்கையருக்கு உடனடியாகக் கொடுக்கக்கூடாது என்பதற்கு அவர்காட்டும் காரணங்கள் வருமாறு,

''பொறுப்பாட்சி கொடுக்க வேண்டும் எனக் கோருவோர் பிரித்தானிய பாராளுமன்ற முறையிலமைந்த ஆட்சியையே கேட்கிறார்கள். அங்கே உள்ள ஆட்சி ஜனநாயகத்தில் அமைந்த பெரும்பான்மைக் கட்சி ஆட்சியாகும். அங்கே உள்ள குடிகள் ,ஒரே இனம்,ஒரே மொழி ,ஒரே கலாசாரம் என்பன உள்ள மக்கட் கூட்டத்தவராவர். அங்கே பெரும்பான்மையினர்,சிறுபான்மையினர் என உள்ளவர் கட்சி அனுதாபத்தில் அமைந்திருப்பவர்களேயல்லாமல் வகுப்பு, இன, மத,மொழிப் பிரிவாலல்ல. எனவே அங்கு வேற்றுமை கிடையாது. ஆனால் இங்கு பெரும்பான்மை என்று எடுத்தால் ஓரினத்தையே கூறவேண்டிவரும். ஆதலால் அத்தகைய ஆட்சி இலங்கையருக்கு இன்றிருக்கும் நிலைமையில் சரிவரமாட்டாது. ஆளுநர் ஆர்தர் கோடனின் எண்ணம் எதுவாயிருந்தாலும் சரி, இன்று பெரும்பான்மையினரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவர்களது ஆட்சி முறைப் பொருத்தப்பாட்டில் ஐயமேற்படவே செய்கிறது.

### இலங்கையின் தேசியக் கொடி

இலங்கை சுதந்திரமடைவதற்குச் சில நாட்களின் முன்னர் பாராளுமன்றத்தில் இலங்கையின் தேசியக்கொடி பற்றிய பிரச்சினை எழுந்தது. சுதந்திரதின வைபவத்தின் போது ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் கொடியானது 1948 இல் பாராளுமன்ற அமர்வின்போது, கடைசிச் சிங்கள மன்னனின் பௌத்த -சிங்களக் கொடியாகிய வாளேந்திய சிங்கக்கொடியே இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. அப்போது கூடச் சிங்களத் தலைவர்களிடத்தே ஒன்றுபட்ட உள்ளத்தினராய்த் தேச விடுதலைக்குப் பாடுபட்ட ஏனைய இனத்தவரைப் புறக்கணித்து விட்டுத் தமது சிங்கள- பௌத்த மேலுணர்வைக் காட்டிடும் சிந்தனைப் போக்குகளே தென்பட்டன. ஜி.ஜி. பென்னம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்ற தமிழத் தலைவர்களின் விடாப்பிடியினைச் சமாளிப்பதற்காகத் தேசியக் கொடியில் தமிழரைக் குறிக்கும் பச்சைக்கோட்டினையும் முஸ்லிம்களைக் கருதும் செம்மஞ்சட்கோட்டினையும் இணைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. காலப்போக்கில் அரசமிலைகள் நான்கு மூலைகளிலும் பொறிக்கப்பட்டு பௌத்த மதச் சின்னத்திற்கு அரச ரீதியான அழுத்தம் அளிக்கப்பட்டது.

(தொடரும்)

# வைத்தீஸ்வரா கல்லூரியின்


## பரிசளிப்பு விழா













(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்றுக் காலை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் க.குணராசாவும்,சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தங்கராஜாவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை உபஅதிபர் மு.தனபாலசிங்கம் ஆற்றினார்.பின்னர் அதிபர் அறிக்கை,பாடசாலை நிறுவுநர் நினைவுப் பேருரையைத் தொடர்ந்து முதன்மை விருந்தினரது உரை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருமதி கமலா குணராசாவின் ஆசிரிய சேவையை பாராட்டி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சார்பாக அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருமதி கமலா குணராசா மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (ஐ-19)

# இன்னும் ஓராண்டு காலத்திற்கு சுனாமி பாதிப்பு இருக்கும்

## பூகம்ப ஆராய்ச்சியாளர் தெரிவிப்பு



(சென்னை)

சுனாமி பாதிப்பு இன்னும் ஒரு ஆண்டுக்கு இருக்கும் என பூகம்ப ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். கடல் உள்வாங்குவதும், கொந்தளிப்பதும் எதனால், என்பது குறித்து பூகம்ப ஆராய்ச்சியாளர் விளக்கம் அளித்துள்ளார்.

டிசம்பர் 26... இன்னும் இந்தத் திகதியை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். 'சுனாமி' எனும் கொடூர அரக்கனின் கோரத் தாண்டவம உலுக்கிய நாள. அன்றைய தினம் ஏற்பட்ட மிகபபெரிய கடல் கொந்தளிபபால் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர். பல்லாயிரக் கணக்கானோர் உறவு, உடைமைகளை இழந்து தவித்தனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த சுனாமியால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது நாகப்பட்டிணம, கடலூர் மாவட்டங்கள்தான். இதற்கு அடுத்தபடியாக கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை வரை கடலோர மாவட்டங்கள் அனைத்துமே பாதிப்புக்குள்ளாயின.

சுனாமி பீதி ஒருபுறம் இருக்க... படகுகள சேதம் இன்னொருபுறம் மீனவர்களை ஆட்டிப் படைத்தது. இந்த சூழ்நிலையில் தற்போது தென் மாவட்டங்களின் கன்னியாகுமரி, திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கடல் தண்ணீர் உளவாங்கி வருகிறது. காலையில் பார்த்தால் வழக்கம்போல கடற்கரைக்கு கடல் அலைகள வந்து வந்து செல்கின்றன. சிறிது நேரத்தில் கடல் நர் எல்லாம் சுமார் 2 கி.மீ.தூரம் வரை உள்ளே சென்றுவிடுகிறது.

இப்படி தண்ணீர் வற்றுவதைக் கணடதும மக்கள் மீண்டும் சுனாமிதான் வரப்போகிறதோ எனக் கருதி அலறியடித்துக்கொண்டு உடைமைகளைக் கையில் சுமந்தபடி ஓட்டம் பிடிக்கிறார்கள். சுமார் 1மணி நேரம் கழித்து மீண்டும் கடல் வழக்கம்போலவே மாறிவிடுகிறது.



இதற்குக காரணம் என்ன என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்படி கடல் உள்வாங்குவதற்குக் காரணம என்ன? மீண்டும் சுனாமி வருமா? என்பது போன்ற பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒரு கருத்தாய்வு கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

சென்னை மயிலாப்பூர் மாங்கொல்லை ஸ்ரீ கற்பகவள்ளி வித்தியாலயாவில் அமைந்துள்ள எம்.டி.டிஸ் அப்துல்கலாம் சயின்ஸ கிளப் சார்பில 'விஞ்ஞானிகளுடன் சந்திப்பு' என்ற நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை, திருவொற்றியூரை சேர்ந்த பூகம்பம் சுனாமி ஆராய்ச்சியாளர் ஏ.கணபதி கலந்து கொண்டு பேசினாா. அவா பூகம்பம், சுனாமியைப் பற்றி மக்களிடையே பேசினார். மக்களின் சந்தேக கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

கூட்டத்தின் போது அவர் பேசியதாவது,

கடலுககு அடியில் வரும் பூகம்பத்தையே சுனாமி என்கிறோம். அதேநேரத்தில் கடலுக்கு அடியில் வரும் எல்லாப் பூகம்பங்களும் சுனாமியாக மாறுவதில்லை. கடலில் அதிக ஆழம் இல்லாமலும், ரிக்டர் ஸ்கேல் அளவில் 6.5க்கு மேல வரும் பூகம்பங்களே சுனாமியாக மாறுகின்றன.

பூமியில் ஏற்படும் பூகம்பம் போல இல்லாமல் கடலுக்குள, கடல் தண்ணீருக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டு, தண்ணீர் மூலம் தாக்கம் பரவுவதால் இதனைச் சரியான நேரத்தில் அறிந்து தெரிவிப்பதன் மூலம் உயிர்ச்சேதங்களைத் தவிர்க்கமுடியும்.

டிசம்பர் 26ஆம் திகதியே விஞ்ஞானிகள் விழிப்புடன் இருந்திருந்தால் முன்கூட்டியே சுனாமி பற்றி எச்சரிக்கை விடுத்திருக்க முடியும. ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

அன்றைய தினம் சுனாமி பெரிய அளவில் ஏற்பட்டது. எனவே இதன் சீற்றம் குறைந்தது ஒரு வருட காலத்திற்காவது இருக்கும். இதனால்தான் தற்போது தென் மாவட்டங்களில் அவ்வப்போது கடல்நீர் உள்வாங்குகிறது. இதேபோல அவ்வப்போது கடல் கொந்தளிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது. கடலுக்கு அடியில் உள்ள பாறைகள் அவ்வப்போது சிறிய அளவில் நகருவதன் மூலம் இதுபோல ஏற்படுகிறது. இந்த மாற்றங்கள் ஒரு ஆண்டுவரை நீடிக்கும். ஆனால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட வாயப்பில்லை. எனவே பொதுமக்கள் பயப்படத் தேவையில்லை.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதிக்கு முன்பு 1883ஆம் ஆண்டு தமிழகத்தில் சுனாமி ஏற்பட்டுள்ளது. இந்த சுனாமி நம் தமிழர்களுக்குப் புதிது. சுனாமி வந்தபிறகு தான் அதனைப் பற்றி யோசிக்கிறோம். ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் கண்டுபிடித்து வடிவமைத்துள்ள டி.எஸ்.எஸ்.பூகம்ப அலாரம் என்ற கருவி சுனாமியை முன்கூட்டியே அறிவிக்கும் திறன் படைத்தது. இதனை வாங்கி மக்கள் தங்கள் வீடுகளில் பொருத்துவதன் மூலம் ஆபத்தான காலங்களில் உயிர்தப்பிக்க வசதியாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

ஆராயச்சியாளர் கணபதி ஏற்கனவே திருட்டுக்களை தடுக்கும் டி.எஸ்.எஸ் பர்குலர் அலாரம், தானியங்கி காண்டம் வழங்கும இயந்திரம் உள்பட பல்வேறு கருவிகளைத் தயாரித்து வடிவமைத்துள்ளார். இவர் டி.எஸ்.எஸ்.பூகம்ப அலாரம், சுனாமி ஏற்பட்ட நாளிலும் அதற்கு முன்பு குஜராத்தில் பூகம்பம் எற்பட்டபோதும் ஒலி எழுப்பி எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூகம்ப ஆராய்ச்சியாளர் ஏ.கண்பதி சமீபத்தில் சீனா சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது சீனாவில் காங்சாவ் என்ற இடத்தில் அமைந்துள்ள சுஷான் சன்யாட்சான் பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தார். அங்கு பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர் கவுன்செயின என்பவர் ஆராய்ச்சியாளர் கணபதியிடம் பூகம்பம பற்றிய பல்வேறு விஷயங்களைக் கேட்டறிந்தார்.

அதன்பிறகு தமிழரான கணபதி கண்டுபிடித்து வடிவமைத்த டி.எஸ்.எஸ்.பூகம்ப அலாரம் கருவியை வாங்கி மேற்படி பல்கலைக்கழகத்தில் பொருத்தினார். அதோடு இக்கருவி பற்றித் தங்கள் பல்கலைக்கழக பாடத் திட்டததில் இடம் பெற ஆவன செய்வதாகவும் அநத பேராசிரியர் உறுதி அளித்துள்ளார்.

பூகம்ப ஆராய்ச்சியாளர் தயாரித்துள்ள டி.எஸ்.எஸ் பூகம்ப அலாரத்தை வீட்டில் மாட்டி வைப்பதன் மூலம் பூகம்பம் சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து உயிர்பிழைக்கும் வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளலாம். இந்த அலாரம் ஏழை மக்களும் வாங்கி பயன்படுத்தும் வகையில் மிகவும் குறைந்த விலையில் ரூ.700க்கு விற்கப்படுகிறது. இது பூகம்பத்தை 4 விநாடிகள் முதல் 130 விநாடிகள் முன்பு வரையிலும் சுனாமியாக இருந்தால் சுமார் 1 மணி நேரத்துககு முன்பாகவே ஒலி எழுப்பி தெரிவிக்கும் இதனால மக்கள் எச்சரிக்கையுடன் பாதுகாப்பான இடத்துக்குச் சென்று தங்களைக் காத்துக்கொள்ள முடியும் என்று ஆராய்ச்சியாளா கணபதி தெரிவிததார்.

டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி எனும ஆழிப்பேரலை தமிழகம் உட்பட்ட அனைத்து கடலோரப் பகுதிகளையும் தாக்கியது. எல்லா இடங்களிலுமே உயிர்ச்சேதம் ஏற்பட்டது. ஆனால் திருச்செந்தூரில் மட்டும் எந்தவித உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? என்று கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர் பூகம்ப ஆராய்ச்சியாளர் கணபதியிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவர் பதில் அளிக்கையில், திருச்செந்தூரில் கடல் அமைப்பே மிகவும் வித்தியாசமாக உள்ளது. கடற்கரையிலேயே பாறைகள அமைநதுள்ளது. அதுபோல இந்திய வரை படததில் பார்த்தால் திருச்செந்தூர் அமைநதிருக்கும் இடத்தில் ஒரு பெண்ட் எல் வடிவில் (வளைவு) இருக்கும். இதனால் சுனாமி பேரலைகள் திருச்செந்தூரை நேரடியாகத் தாக்க வாய்ப்பில்லை. எனவேதான் சுனாமி ஏற்பட்டபோது திருச்செந்தூரில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றார். (ந)

# கடல் கொந்தளிப்பு சுனாமி பீதியில் மக்கள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைக் கடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொந்தளித்துக் காணப்பட்டது.

இடி மின்னல் இடம்பெற்ற சமயம் கடல் கொந்தளித்து பாரிய அலைகளும் எழுந்த வண்ணமிருந்தன.

இதனால் மீண்டும் சுனாமி பீதியில் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அரைமணி நேரத்தில் அலைகள் அடங்கியதால் மக்கள் பயம் தெளிந்தனர். (ந-51)

# புங்குடுதீவில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்துக்கான குடிநீர் தேவையினை வட இலங்கை சர்வோதயம், வேலணை பிரதேசசபை என்பன மேற்கொண்டு வநதன. இதில் வேலணை பிரதேச சபையினால இலவச குடிநீர் சேவை நடாத்தப்பட்டு வந்தது.

அவ் இலவச குடிநீர் சேவை இவ்வருட ஆரம்பத்தில் இருந்து வழங்கப்படவில்லை.


அதேவேளை, வேலணை பிரதேசசபையின் குடிநீர் பவுசர் நீண்ட பல மாதங்களாக சேவையில் ஈடுபடுத்தவில்லை. இதனால் வட இலங்கை சர்வோதயத்தினாலேயே மக்களுக்கான குடிநீர் தேவை பூர்த்திசெய்யப்பட்டு வருகின்றது.

ஆனால் அவர்களினால் வழங்கப்படுகின்ற குடிநீரும் ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை. அதேவேளை, உள்ளூர் கிராமங்களுக்கு வாகனம் செல்ல முடியாது வீதிகள் படுமோசமான பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால் அங்கு வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் ஒரு கிழமைக்கு ஒரு தடவையேனும் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

இதனால் இங்கு வாழ்கின்ற மக்கள் தங்களுடைய குடிநீர்த் தேவையினைக் கருதி குடங்கள், பைபர்களுடன் வதிகளில் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே இப் பிரதேச மக்களின் குடிநீர் தேவையினை ஓரளவேனும் பூர்த்திசெய்வதற்கு மாவட்ட அரசாங்க அதிபரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்திற்கொண்டு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-126)

# மாபெரும் நற்கருணைப் பவனி





(யாழ்ப்பாணம்)

நற்கருணை ஆண்டினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறப்பு நிகழ்வாக அனைத்து இறை மக்களும் ஒன்றிணைந்து நற்கருணை ஆண்டவரை மகிமைப்படுத்தி நடாத்திய மாபெரும் நற்கருணைப் பவனி கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.நகரில் இடம்பெற்றது.

ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவாக நடைபெற்ற இப்பவனி பிற்பகல 4.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஆரம்பமாகியது.

அங்கிருந்து புறப்பட்ட பவனி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயம், சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயம், அடைக்கல அன்னை ஆலயம், குருநகர் புனித யாகபர் ஆலயம் ஆகியவற்றினைச் சென்றடைநது இறுதியில் மரியன்னை பேராலயத்தை சென்றடைந்தது.

அங்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் வழிபாடு இடம்பெற்றது.



இந்நிகழ்வில், யாழ்.குடாநாட்டில் உள்ள பெருமளவான மக்களும், குருமார் மற்றும் கன்னியாஸ்திரிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பவனியினை ஒழுங்குபடுத்தும முகமாக போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன், அடைக்கல அன்னை ஆலயத்தின் வழிபாட்டு நிகழ்வில் நூற்றுக்கணக்கான படையினரும் கலந்துகொண்டனர். (ந-4)

# திருமலையில் படையினருக்கு துண்டுப்பிரசுரம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் சிறிலங்கா உயர் தலைமையின் நலன்களுக்கு பலியாகாமல் செயற்படுவது பற்றி சிந்திக்குமாறு பராக்கிரமபாகு படைப்பிரிவு என்ற பெயரிலான துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் சிறிலங்கா படைச் சிப்பாய்களிடமும் சிங்கள மக்களிடமும் விநியோகிக்கப்பட்ட இந்தத் துண்டுப்பிரசுரம் பல செய்திகளைக் கூறியுள்ளது.

அரசுத் தலைமையும் படை உயர் தளபதிகளும் சுகபோகங்களை அனுபவிக்க, சாதாரண நிலை இராணுவத்தினா இப்போதும வதியோரங்களில் உட்காரக்கூட விடப்படாமல் 24 மணிநேரமும் பாதுகாப்புக்கடமை என்ற பெயரில் நிற்க வைக்கப்படுவதாகவும் போரில் பலியாக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி படையினர் இதுபற்றி சிந்திக்க வேண்டும் எனவும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இன்றைய அமைதிக்காலத்திலும் தளபதிகளால் சாதாரண படையினர் வதைக்கப்படுவதைக் கடுமையாக விமர்சித்து படையினர் வீடு செல்வது பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப்பிரசுரம் திருகோணமலையில் படையினர் மற்றும் சிங்கள மக்கள் தரப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (து)

# விமானப்படை பயிற்சி முகாமால் பிரதேச மக்களுக்கு பெரும் சிரமம்

(புத்தளம்)

கல்பிட்டி கண்டல்குழி பிரதேசத்தில் விமானப்படையினரின் பயிற்சி முகாமில் தொடர்ந்து பயிற்சிகள் நடைபெறுவதால் அப் பிரதேசம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், இதனால் இப் பிரதேசத்திற்கு உல்லாசப் பயணிகள் வருவதில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய புத்தளம் மாவட்ட ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா இம் முகாம் தொடர்ந்து இங்கு செயற்படுவது குறித்து மீள் பரிசீலனையினை செய்ய வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புததளம் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட செயலாளர் எச். எம்.ஹேரத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நியோமல் பெரேரா எம்.பி.மேலும் பேசுகையில் கூறியதாவது,

கண்டக்குழி விமானப்படை பயிற்சி நிலையத்தின் பயிற்சிகளை மேற்கொள்கின்ற போது, அப் பிரதேச மக்கள் பெரும் அச்சம்கொள்கின்றனர் அங்குள்ள 22 குடும்பங்கள் வேறு இடத்துக்கு மாற்றப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலாளர், விமானப்படை அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுப்பதாக அறியப்படுகின்றது.

யுத்த பயிற்சித் தளங்கள் அமைகின்ற இடங்கள் சர்வதேச சட்டதிட்டத்திற்கு அமைவாக அமைந்திருப்பதுடன் அது மக்களைப் பாதிக்காத முறையிலும் அமைய வேண்டும்.

நாடுகளுக்கிடையில் செய்யப்படுகின்ற மனித உரிமை சாசனங்கள் இலங்கையிலும் மதிக்கப்பட வேண்டும். இங்கு தொடர்ந்து பயிற்சிகளை நடத்துவது பொருத்தமற்ற செயலாகும் என்றார். அத்துடன் இதற்கு தனது எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். (ற-15)

# கிழக்கில் நிழல்யுத்தம் தொடர்கிறது

உயிரற்றுப்போகும் சமாதான காலத்தில் உயர்பெற்றுவரும் போராட்டத்தினை முன்னெடுத்து நாம் யார் என்பதனை எதிரிக்கு காட்டுவதற்கு தயாராகி நின்று எமது தேசியத்தலைவருக்கு கைகொடுப்போம் என சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித்தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் தெரிவித்துள்ளார்.

கடநத ஞாயிற்றுக்கிழமை இரவு கிளிநொச்சி பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஓயாத அலைகள்-1,2,3 காலப் பகுதியில் 1,460 நாட்கள் தொடர்ந்தும் நாங்கள் போராடினோம். நாங்கள் கொடுத்த விலைகள் வெறெந்த நாடுகளிலும் கொடுத்திருக்கமுடியாது.

எங்களது இறுதி உயிர் மூச்சுக்களிலும் உரைத்தது 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்பதே! எமது மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ தனியரசுக்காகப் போராடிவரும் ஓர் விடுதலை இயக்கமாக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.இரண்டு வருடத்திற்கு மேலாக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையினை ஒருசில நாட்களில் முறியடித்து வெற்றிபெற்றோம்.

யாழ்ப்பாணத்தின் இதயமான ஆனையிறவினை மீட்கலாம் என பகல் கனவுடன் வந்த எதிரியின் தீச்சுவாலை நடவடிக்கையினை 72 மணித்தியாலத்தில் வெற்றி கொண்டு முறியடித்த வீரம் எமது மக்களில் இருந்து பிறந்தவை என்றார்.

இன்றும் கிழக்கில் சிங்களப புலனாய்வுத் துறையினரால் நடாத்தப்பட்டுவரும் நிழல்யுத்தம் தொடர்கின்றது.

உயிரற்றுப் போய்க் கொண்டிருக்கும் இந்த மூன்றுவருட சமாதான காலத்திலிருந்து மீண்டும் உயிர்பெற்று போராட்டததினை முன்னெடுத்து நாம் யார் என்பதை எதிரிக்கு தெரியப்படுத்துவோம். எமது தேசியத் தலைவருக்கு கைகொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# குறைபாடுகள் பற்றி பெற்றோர் விசனம்

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்துக்கென நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லை. இதனால் விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிகள் வழங்குவதற்கு மாணவர்களை தூர இடங்களுக்கு கூட்டிச் சென்றே பயிற்சி வழங்கவேண்டியநிலையில் உள்ளது. இதனால் மேலதிக நேரம் விரயமாவதுடன் மாணவர்களைக் கூட்டிச்சென்று பின் கூட்டிவருவதில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இப்பாடசாலைக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாத குறையுடன் தளபாடங்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் இப் பாடசாலைக்கென தட்டெழுத்துப் பொறியோ, கணனியோ, றோனியோ மெசினோ, தொலைக் காட்சிப்பெட்டியோ, டெக்கோ எதுவுமே இல்லை என்றும் ஆனால் வேறு பாடசாலைகளில் இப்பேற்பட்ட பொருட்கள் ஒன்றுக்கு மேற்பட்டன உள்ளதென்றும் தமது பிள்ளைகள் கல்விகற்கும் இப பாடசாலைக்கு எதுவித வசதிகளும் இன்மையாலும் இப் பாடசாலையின் தேவைகளை நிவர்த்திக்க யாரும் முன்வராததாலும் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கேள்விக்குறியான நிலைக்கு வந்துவிடுமோ என அச்சம் கொள்வதாக மேற்படி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.. (அ-104)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி உ.அ.அ.பி.அணி வெற்றி

(சுண்டுக்குளி)


வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுள் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள், கடந்த திங்கட்கிழமை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி, அதனை எதிர்த்தாடிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

கரவெட்டி அணி பெற்ற இரு கோல்களில ஒன்றை ஜே.வினோதினியும் மற்றையதை கே.கேமாவதியும் பெற்றுக்கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி அதனை எதிர்த்து ஆடிய யாழ்.உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணியைப் பலத்த போட்டியின் பின் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

கரவெட்டி அணியின் வெற்றிக்கு வழிவகுத்த அந்த இரு கோல்களையும் எஸ்.சர்மிலா பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் இராஜசிங்கம் கலந்துகொண்டார். (ற-110)



வேலணை மேற்கு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் வைகாசி விசாகப் பெருவிழாவின் போது "கம்பராமாயணம்" பற்றி தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்திய நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் கொக்குவில் கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவுக்கு பூர்த்தி விழாவன்று பொன்னாடை போர்த்திக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# நகர சபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

**கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 16.06.2005ஆம் திகதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.**

**இவ்வேலையின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தின் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகமையுடையவராவார்.**

**ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத் தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ. ச. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. ச. |
|---|---|---|
| 01.பொதுச் சந்தையில் திறந்த சந்தைக் கொட்டகை அமைத்தல். 40' 30' | 4,000.00 | 575.00 |
| 02. அம்மன் வீதி திருத்தம். வட்டாரம்-2 கட்டம் (1) | 4,700.00 | 575.00 |
| 03. உப்புக்கேணி வீதி திருத்தம் -1750' வட்டாரம் 8. | 6,800.00 | 575.00 |
| 04. செருக்கல் பிள்ளையார் கோவில் வீதி திருத்தம் 1500'. | 6,300.00 | 575.00 |
| 05. அலுவலக வளாகத்தினுள் காவலாளி கொட்டகை அமைத்தல். | 2,000.00 | 575.00 |
| 06. அலுவலக வளாகத்தினுள் வாகன தரிப்பிடக் கொட்டகை அமைத்தல். | 2,000.00 | 575.00 |

**கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 14.06.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தை யும், கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள லாம்.**


**கேள்விப்படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி "செய லாளர் நகரசபை, சாவகச்சேரி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதி "பி/உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் 16.06.2005ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப் படவேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.**

**இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவல கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

(திருமதி கு.ஆறுமுகம்)
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
30.05.2005.

# தற்கொலை குண்டுத் தாக்குதல் 25பேர் பலி;100பேர் படுகாயம்



(ஹில்லா)

**ஈராக்கில் முன்னாள் பொலிஸ் கமாண்டோக்களுக்கு குறிவைத்து கடந்த திங்கட்கிழமை தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியதில் 25 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுககும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.**

இரண்டு மாதங்களுக்கு முன் வேலை இழந்த பொலிஸ் கமாண்டோக்கள் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் ஹில்லா அரசு அலுவலகத்தின் வெளிப்பகுதியில், தங்களது சம்பள நிலுவையைப் பெறக் கூடியிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த 2 தற்கொலைப் படை நபர்கள், உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# மாபெரும் தேடுதல் வேட்டையில் 50,000 ஈராக் - அமெ. வீரர்கள்!

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளைத் தேடும் பணி மிகப்பெரிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது.

சுமார் 40 ஆயிரம் ஈராக் வீரர்களும் 10 ஆயிரம் அமெரிக்க கூட்டுப்படையினரும் இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

சதாம் உசேன் ஆட்சி வீழ்ந்த பிறகு நடத்தப்படும் மிகப்பெரிய அளவிலான தேடுதல் பணி இதுவென்றும், இதற்காக பக்தாத் நகரின் அனைத்து எல்லைகளும் மூடிவைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 4 வார காலத்தில் தீவிரவாதிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு 700 பேர் பலியானதை அடுத்து இந்த மாபெரும் நடவடிக்கை தொடங்கப்பட்டதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தீவிரவாதிகளின் தாக்குதலில் 100 அமெரிக்க வீரர்களும் கடந்த 4 வாரங்களில் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நடவடிக்கையைத் தொடங்குமாறு ஈராக்கின் புதிய அரசாங்கத்தை அமெரிக்கா வற்புறுத்தியதாகவும் செய்திகள் கூறுகின்றன. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானின் டோக்கியோ நகருக்கு கிழக்கே 50கி.மீ. தொலைவில் உள்ள சிபா என்ற இடத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.6 ஆக இது பதிவாகியிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (ற)

# லெபனான் தேர்தல்; முன்னாள் பிரதமரின் மகனது கட்சி அமோக வெற்றி

(பெய்ரூட்)

லெபனான் தேர்தலில் முன்னாள் பிரதமரின் மகனது கட்சி வெற்றி பெற்றுள்ளது.

லெபனான் நாட்டில் பிரதமராக இருந்தவர் ரபிக்ஸ் அல்ஹரார். கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து லெபனான் நாட்டில் தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் உள்ள 128 உறுப்பினர்களுக்கு நடந்த வாக்குப்பதிவில் மொத்தம் 4,20,000 வாக்குகள் மட்டுமே பதிவானது. இது வெறும் 28 சதவீதம் ஆகும்.

இந்த வாக்குப் பதிவில் ராபிக்ஸ் அல் ஹராரியின் மகனது கட்சி அமோக வெற்றி பெற்றது. தலைநகர் பெய்ரூட்டில் உள்ள 19 இடங்களையும் ஹராரி கட்சி கைப்பற்றியது.

மந்திரி ஹசன் அல்சபா ஹரிரீ மொத்தம் பதிவான 42 ஆயிரம் வாக்குகளில் 39,500 வாக்குகள் பெறறுற வெற்றி பெற்றார். (ற)



ஐஸ்லாந்து தீவில் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். விமான நிலையத்தில் இந்திய தூதர் குடும்பத்தினர் அவரை அன்புடன் வரவேற்ற காட்சி.

# தஞ்சை பெரிய கோவிலில் பழங்கால பீரங்கிக் குண்டுகள்!

(தஞ்சை)

தஞ்சை பெரிய கோவிலில் பழங்கால பீரங்கி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற கோவில்களில் தஞ்சை பெரிய கோவிலும் ஒன்றாகும். இந்தக் கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்ட கோவிலாகும்.

இந்தக் கோவிலின் சுற்றுப்புறத்தை தூய்மை படுத்தும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக கேரளந்தகன் கோபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் சீரமைக்கப்பட்டு வருகிறது.

கேரளந்தகன் கோபுரத்தின் அதிட்டான பகுதியில் உள்ள ஒரு திறப்பில் இருந்த மண் அகற்றப்பட்டது. அப்போது சுமார் முக்கால அடி விட்டமுள்ள இரும்பிலான பீரங்கிக் குண்டுகள் நூற்றுக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டன. இவற்றைக் கண்டெடுத்த இடத்திலேயே வைக்கப்பட்டு கம்பி வலையுடன கூடிய மரக் கதவு கொண்டு அடைக்கப்பட்டன.

இந்தக் குண்டுகள் குறித்து தொல்பொருள் துறை அலுவலர்கள் தெரிவிக்கையில்,

இந்தப் பீரங்கிக் குண்டுகள் பொது மக்கள் பார்வைக்காக பின்னர் கோவிலின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்படவுள்ளன.

இவை எந்தக் காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என் விரைவில் கண்டறியப்படும என்றார்.

மேலும், தொல்பொருள் ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகையில்,

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த காரைக்காலில் இருந்த பிரெஞ்சு கர்னல் லாலி என்பவர் கி.பி 1758ஆம் ஆண்டு சிதம்பரம், புவனகிரி, நாகூர், கீவளூர் ஆகிய ஊர்களில் உள்ள கோவில்களைத் தாக்கி கொள்ளையடிக்க முயற்சித்தார்.

ஆனால் அஙகு விலை உயர்ந்த நகைகள், சிலைகள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் தஞ்சைக்கு 5 பீரங்கியுடன் வந்தார். பெரிய கோவிலின் வெளியே தென்கிழக்குப் பகுதிகளில் இருந்து 3 பீரங்கிகள் கொண்டு சுற்றியுள்ள சிறிய கோட்டையைத் தாக்கினாா.

இந்தத் தாக்குதல் தொடர்ந்து 3 நாட்கள் நடந்தன. இதேபோல கி.பி 1771 மற்றும் 1773 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டிஷ் படையினரும பெரிய கோவிலைச் சுற்றியுள்ள கோட்டை மீது பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

பிரெஞ்சு, பிரிட்டிஷ் படைத் தாக்குதலின் போது வந்து விழுந்த குண்டுகளை பிற்காலத்தில யாராவது அதனை எடுத்து ஒரே இடத்தில் சேர்த்து வைத்திருக்கலாம்.

தற்போது கிடைத்திருக்கும் இக்குண்டுகள் அந்த இரு தாக்குதலில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்க வாய்ப்பு உள்ளது என்றார். (ற)

# மனிதவுரிமை அமைப்பின் அறிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம்


(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள குவான்ரநாமோ சிறைச்சாலையில் உள்ள கைதிகள் சித்ரவதை செய்யப்படுவதாக உலக மனிதவுரிமை அமைப்பு அறிக்கை வெளியிட்டிருப்பதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அச்சிறையில் முஸ்லிம்களின் புனிதநூல் 5 முறை அவமதிக்கப்பட்டதை அமெரிக்க இராணுவ அதிகாரி றிச்சட் மைஸ் ஒப்புக்கொண்ட போதிலும், ஜெனீவா பரிந்துரைகளின்படி அங்குள்ள போர்க்கைதிகள் சிறப்பான முறையில் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

13 வெவ்வேறு மொழிகளில் சுமார் ஆயிரத்து 300 அச்சு புனிதநூல்கள் அங்குளள முஸ்லீம்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு நல்ல உணவுவகைகளும், வசதிகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# சீறுகிறது பேரன் தீவு எரிமலை



(போர்ட்பிளேர்)

அந்தமானில் உள்ள பேரன் தீவில் எரிமலை வெடித்து நெருப்புக் குழம்பைக் கக்கி வருகிறது.

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேரிலிருந்து 140 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது பேரன்தீவு. இங்குள்ள எரிமலை 10 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் நெருப்புக் குழம்பைக் கக்கத் துவங்கியுள்ளது.

கடலோர காவல்படை டி.ஐ.ஜி. பாஸ்ரா தலைமையிலான குழுவினர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் இப்பகுதியில் ரோந்துப்பணி சென்ற போது அனல்காற்று வீசியுள்ளது.

இதனால் சந்தேகமடைந்த இக்குழுவினர் தீவுக்குள் சென்று பார்த்தபோது எரிமலை நெருப்புக் குழம்பைக் கக்கத் துவங்கியுள்ளதைக் கண்டனர்.

சாதாரண நாட்களில் எரிமலையின் அடிவாரம் வரை சென்று வந்ததாகவும் தற்போது 50 மீற்றர் தூரத்துக்கு மேல் தீவுக்குள் செல்ல இயலவில்லை எனவும் இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பேரன் தீவில் மக்கள் வசிப்பதில்லை. எனவே எரிமலையால் யாரும் பாதிக்கப்படவில்லை என இக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற)

# காஷ்மீர் மாநிலத்தில் பனிச்சரிவு 10 பேர் உயிருடன் சமாதி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் பனிச்சரிவு ஏற்பட்டு 10 பேர் உயிரோடு புதைந்துள்ளனர்.

காஷ்மீர் மாநிலத்தின் மலைப்பகுதிகளில் நேற்று முன்தினம் பனிப்பொழிவு கடுமையாக இருந்தது. இதனால் ஆங்காங்கே பனிச்சரிவுகள் ஏற்பட்டன.

ஸ்ரீநகரில் இருந்து 80 கிலோமீற்றர் தூரத்தில் கப்ரன் என்ற கிராமம் உள்ளது. நேற்று முன்தினம் அந்தக் கிராமத்தில் பனிச்சரிவு ஏற்பட்டது.

இதில் 10 பேர் உயிரோடு புதைந்து சமாதி ஆனார்கள். ஏராளமான கால்நடைகளும் பனிச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றி தகவல் கிடைத்ததும பொலிஸ்படை விரைந்தது. ஆனால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் வாகனங்கள் செல்ல முடியவில்லை.

எனவே, பொலிஸார் சுமார் 4 மணி நேரம் பனிக் குவியலின் மீது கஷ்டப்பட்டு நடநது சென்று கப்ரன் கிராமத்தை அடைந்தனர். அதன்பிறகு மீட்புப்பணி தொடங்கியது.

இதுதவிர, உயிரிழப்பு, சேத விபரம் குறித்து எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. (ற)

# அணு ஆயுதப் பரவல் தடை பேச்சுவார்த்தை தோல்வி

அணு ஆயுதப் பரவல் தடை குறித்து கடந்த ஒரு மாதகாலமாக ஐ.நா. சபையில் நடைபெற்று வந்த விவாதம் தோல்வியில் முடிந்துளளது. ஐ.நா. சபையில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளில் குறிப்பிட்ட ஒன்பது நாடுகளிடம் 30 ஆயிரம் அணு ஆயுதங்கள் உள்ளன.

உலகைப் பலமுறை அழிக்கும் ஆணு ஆயுதத் தொழில்நுட்பத்தை 10க்கும் மேற்பட்ட நாடுகள் கொண்டுள்ளன. இஸ்ரேலிடம் மட்டும் 200 ஆணு ஆயுதங்கள் உள்ளதாகக கூறப்படுகிறது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்த அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பநததில் கையெழுத்திட மறுத்து வருகின்றன.

இந்நிலையில், ஒரு மாதமாக நடநதுவரும இம்மாநாட்டில் அமெரிக்கா தனது அணு ஆயுதங்களை அழிக்க மறுப்புத் தெரிவிததுடன், தங்களுககுத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதால், ஆயுதங்களை அழிக்கமுடியாது எனவும், ஆனால் வடகொரியா, ஈரான் போன்ற நாடுகள் அணு ஆயுதம் தயாரித்தால் உலகிற்கு அச்சுறுத்தல் எனவும் கருத்துரைத்தது.

அமெரிக்காவின் இவ்வாதத்தை உலக நாடுகள் பலவும் கடுமையாக எதிர்த்தன. கடைசியில் இம்மாநாடு எந்தப் பயனுமின்றி தோல்வியில் முடிந்தது. (ற)

புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும் - குறள்

வலம்புரி

# பொதுக் கட்டமைப்பு சாத்தியப்படுமா?

சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படும் வகையிலான பொதுக்கட்டமைப்பு பிரசவத்தின் போதே உயிரிழக்கும் அபாயத்திலுள்ளது.

ஜே.வி.பி எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என்ற ஜனாதிபதியின் உறுதியை உலக நாடுகளே வியப்புடன் பாராட்டின.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதானது நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு மட்டுமல்ல, தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கும் தேவையானதாகும்.

அவ்வகையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவேன் என்ற ஜனாதிபதியின் திடசங்கற்பம், அவர் சமாதானத்தின் மீது உறுதியுடன் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதாகவும் இருந்தது.

இங்குதான் ஜனாதிபதியின் அரசியல் இராஜதந்திரம் வெளிப்படுகின்றது. அதாவது பொதுக்கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் அது உலக நாடுகளில் தவறான கருத்தை ஏற்படுத்துவதோடு அந்த நாடுகளின் உதவியைப் பெறமுடியாமலும் போகும்.

எனவே பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது என்பதைப் பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம் தன்னை சமாதான விருப்புடையவராகக் காட்டிக்கொள்வது ஜனாதிபதியின் திட்டம்.

அதேநேரம் பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் போது அதனை ஜே.வி.பி எதிர்க்கும் என்பதும் ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். அத்தகையதோர் எதிர்ப்பு அவருக்கு தேவையானதொன்றாக இருக்கின்றது. அதற்குக் காரணமும் உண்டு.

பொதுக்கட்டமைப்பை உருவாக்க விரும்பினாலும் அதனை ஜே.வி.பி எதிர்க்கின்றது. அப்படியிருந்தும் நான் அதில் உறுதியாக இருக்கின்றேன் என சர்வதேசத்திற்கும், சிங்கள மக்களுக்கும் காட்டுவது.

இவ்வாறு ஒருபுலக் காட்சியை மக்களின் மனத்திரையில் ஏற்படுத்திவிட்டால் எதிர்வரும் தேர்தல்களில் "நான் பொதுக்கட்டமைப்பை உருவாக்க முயற்சித்தேன். அனால் ஜே.வி.பி போன்றவர்களால் அது முடியாமல்போயிற்று" எனக் கூறிக்கொள்ளலாம். அவ்விதம் பிரசாரம் செய்வதன் மூலம் ஜே.வி.பிக்கான மக்கள் ஆதரவைக் குறைக்கமுடியும் என்பது ஜனாதிபதியின் நம்பிக்கை.

அதற்காகவே பொதுக்கட்டமைப்புப் பற்றி அவர் பேசிக் கொள்கிறார். உண்மையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் ஜனாதிபதிக்கு இம்மியும் உடன்பாடில்லை.

ஆனால் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது போல காட்டிக்கொண்டு சர்வதேச உதவிகளைப் பெறுவதும், பொதுக் கட்டமைப்பை உயிர்ப்பில்லாமல் செய்வதுமே ஜனாதிபதியின் உள்நோக்கம்.

அத்தகையதொரு நோக்கம் அவரிடம் இல்லாதிருப்பின் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக முப்படைத் தளபதிகளுடன் ஆராயவேண்டிய தேவை இருக்க மாட்டாது.

பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்ற உறுதியை எடுத்த ஜனாதிபதி படைமுகாம்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் அடங்கிய பகுதிகள் பொதுக்கட்டமைப்புக்குள் அடங்காதென்ற உறுதிப்பாட்டை படைத் தளபதிகளிடம் வழங்கியிருப்பது எதற்காக?

ஜே.வி.பி. எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவேன் எனக்கூறிய ஜனாதிபதி, இப்போது உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள், படைமுகாம் அமைந்த இடங்கள் பொதுக் கட்டமைப்புக்குள் அடங்காது எனக் கூறுவது விசித்திரமாகவே இருக்கின்றது.

அவர் கூறுவதன் உண்மை வடிவம் பொதுக்கட்டமைப்பை உருவாக்கமாட்டேன் என்பதாகவே பொருள் தரும். ஜே.வி.பியின் வாலைப் பிடித்துச் சென்று ஆட்சியைப் பிடித்த ஜனாதிபதி, ஜே.வி.பி. தனது அரசிலிருந்து விலகிச்செல்வதை ஒருபோதும் விரும்பமாட்டார்.

எனினும் ஜே.வி.பி. விலகினாலும் அதையிட்டு கவலைகொள்ளமாட்டேன் என்ற ஜனாதிபதியின் வாசகம், பொதுக்கட்டமைப்பு சாத்தியமாகாதென்ற நம்பிக்கையில் கூறப்பட்டதாகும்.

அதனை வெளிப்படுத்தும் நாடகமே முப்படைத் தளபதிகளுடன் அவர் நடத்திய திடீர் சந்திப்பாகும்.

# ஜனாதிபதியின் 'ஜனபுபுது' திட்டத்தின் கீழ் 7 மாதங்களில் 70% அபி. பணிகள் பூர்த்தி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப்பீடம் ஏறிய பின்பு உருவாக்கிய "ஜனபுபுது" என்ற திட்டத்தின் கீழ் 7 மாதங்களுக்கும் 70 சதவீதமான பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்திட்டத்தில் 30 ஆயிரம் சிறுதிட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் 20 திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன. 'ஜனபுபுது' 'கம்புபுது' 'கெமி திரிய' என்னும் பெயருடைய இத்திட்டங்கள் சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த ஒக்ரோபரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

"ஜனபுபுது" திட்டத்தில் விவசாயம்,சந்தைப்படுத்தல், கைத்தொழில், விலங்குகள்,பாதுகாப்பு, மீன்பிடி, சிறிய கைத்தொழிலகளை நடுத்தரக் கைத்தொழிலாகத் தரம் உயர்த்தல் என்பன அடங்குகின்றன.

இதன்படி, ஒரு குடும்பத்தில் 3 பேர் வருமானம் பெறக்கூடியவர்களாக அதாவது 3 பேர் உழைப்பவர்களாக இருப்பர் என சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சா திருமதி பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

'கம்புபுது' திட்டத்தில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, குடிநீர்திட்டங்கள, கிராமிய வீதிகள், பாலங்கள் புனரமைப்பு என்பன அடங்கும் இவ்வருடத்தில் 314 பிரதேச சபைப் பிரிவுகளில 1.5 மில்லியன் குடும்பங்கள் நன்மை பெறக்கூடியதாக 13 ஆயிரத்து 929 திட்டங்கள் பூர்த்தியாக்கப்படவுள்ளன. இவ்வருடம் ஓகஸ்ட் இற்குள் சமுர்த்தி அமைச்சு 290 பிரதேச சபைகளில் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாவீதம் 2030 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாக அரசவட்டாரங்கள் மேலும்தெரிவித்தன. (ந,4,6)

# தேர்தலுக்கான முன் நகர்வுகளில் தீவிரமாக ஈடுபடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக தனது வாக்காளர் தொகையை அதிகரிக்கும் பொருட்டு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் திடமான தொண்டர்களைச் சோததுக் கொள்ளும் பணியை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் இளைஞர் முன்னணி, பெண்கள் முன்னணி என்பனவுடன் ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருந்தும் அதிலுள்ள ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 5 செயற்பாட்டாளர்களைக் கட்சியின் கிளைகள் தெரிவு செய்யும் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திடீர் தேர்தல்கள், கருத்துக் கணிப்புகள் என்பன நடைபெறுமானால் அதற்குத் தயாராக இருப்பதற்காகவே வீடு வீடாகச சென்று பிரசாரம் செய்வதற்கும் அடிமட்டம் வரை சென்று பிரசாரங்களை முன்னெடுப்பதற்காகவும், இப்புதிய செயற்பாட்டாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இதற்கென பெண்கள் முனனணியினதும், இளைஞர் முன்னணியினதும் புதிய அலுவல்கள் பிரிவிலிருந்தும் 5 பேர் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் பிரசாரத்திற்கு அமர்த்தப்படவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரமானது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான 5 குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதாகவே அமையும். அவையாவன வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலையில்லாப் பிரச்சினை, ஊழல்கள், வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமை, அபிவிருத்தியில் முன்னேற்றம் இல்லாமை என்பனவாகும். மேற்படி அங்கத்துவர் தெரிவு மாத்தறையிலிருந்து கொழுமபுவரை ஐக்கிய தேசியக் கட்சி நடாத்தவுள்ள 10 நாள் எதிர்ப்புப் பேரணிக்கு முன்னர் நிறைவுபெறும். மேற்படி பேரணி கொழும்பில் அரசுக்கு எதிரான மாபெரும் பேரணியாக மாறும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்துள்ளது. சுதந்திரக் கட்சி இன்னமும் தெரிவுசெய்யவில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது 2வது பதவிக் காலத்தில் இருப்பதனால் அவர் மீண்டும் போட்டியிடமுடியாது. இதனாலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்துப் பிரதமருக்கு முழு அதிகாரத்தை அளிக்கும் முறையைக் கொண்டு, தான் மீண்டும் பிரதமராக ஜனாதிபதி குமாரதுங்க முயன்றுவருகிறார். இருப்பினும் ஜே.வி.பியைக் கூட்டாளியாகக் கொண்ட அவரது கூட்டணியில் இதற்கான 2/3 பங்கு அவர்களுக்கு பாராளுமன்றில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-04,06)

# மண்வளத்தை கொள்ளையிடுவோர் மீது விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மண் வளத்தினைக் கொள்ளையிடுபவர்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மிக விரைவில் உரிய நட வடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மந்துவிலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.இது தொடர்பாக அவா மேலும் குறிப்பிடுகையில்,

சட்டவிரோதமான முறையில் மண அகழ்வில்ஈடுடுபவ்கள் மந்துவில், குமபாவெளி,கச்சாய், வரணி, அம்மா கடையடி, இயற்றாளை உள்ளிட்ட பல பகுதிகளில் மண்ணைக் கொள்ளையடித்து வருகின்றனர். இத் தகையவர்கள் பற்றிய தகவல்களை நாம் திரட்டியுள்ளோம்.

இததகையவர்களுக்கு எதிரான நடவடிக்கை அவசியம் எடுக்கப்படும. தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிராக யார் சிந்திக்கின்றார்களோ அவர்களை நாம் கையாள்வோம் என்றும தெரிவித்தார். (ந-16)

# சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தாலியின் உதவியுடன் 300 வீடுகள்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மககளுக்கு 300 வீடுகளை அமைப் பதறகு இத்தாலி உதவி வழங்கும். ஒவ்வொரு வீடும் ஆறு இலட்சம் ரூபா செலவில் கட்டப்படுமென்று இத் தாலியின் ஒஸ்ரா மாகாணசபை அறிவித்துள்ளது.

சமூக நலன்புரி பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தகவல் தரு கையில் திருக்கோணமலை மாவட்டத்தல் இடம் பெயர்ந்த பெண்களின தும் சிறுவர்களினதும் வசதி கருதி புனர்வாழ்வு நிலையமொன்று இத் தாலியினால் அமைக்கப்படுமென்றும கூறினார்.

இதற்கென 2 கோடி 20 இலட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட் டங்கள் சம்பந்தமான ஒப்பந்தங்களில கைச்சாத திடவென இத்தாலிய நிபுணாகள் குழுவினா விரைவில் இங்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ5)

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 723 மீன் பிடிப் படகுகள்

## அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் 723 மீன் பிடிப் படகுகளை வழங்கவுள்ளன.

இதன் அடிப்படையில் மனித உரி மைகள் நிதியம் 30 படகுகளை யும், ஒக்ஸ்பாம் 40 படகுகளையும், ஐககிய நாடுகள் சபை நிதியம் 250 படகுகளையும், கரித்தாஸ் 200 படகுகளையும், போரூட் 33 படகு களையும்,கெயர் நிறுவனம் 170 படகு களையும பாதிக்கப்பட்ட மீனவர்க ளுக்கு வழங்கும் எனத் தெரியவரு கின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கியூ மெடிக்கா 154 படகுகளையும், ஜ.ரீ.இசற 15 பட குகளையும், தென் இந்தியத்திருச் சபை 9 படகுகளையும், பட்டினிக்கு எதிரான இயக்கம் 10 படகுகளுமென மொத்தம் 188 மீன்பிடிப் படகுகளை ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, ஊற்று நிறுவனம், மூவிமெனடோ, பட்டினிக்கு எதிரான இயக்கம் ஆகியவை பாதிக்கப்படட மீனவ்களுக்கான கட்டுமரங்களை தற்போது வடமராட்சிப் பிரதேசத்தில் வழங்கி வருகின்றன. (ந-16)

# ஆலயத்திற்கு செல்ல படைத்தரப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

மறவன்புலவு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க வள்ளக்குளப்பிள்ளையார் ஆலயத்திற்கு நான்கு ஆண்டுகளின் பின்னர் பக்தர்கள் சென்று வழிபாடு நடாத்துவதற்குப் படைதரப்பினா அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மறவன்புலவைச் சேர்ந்த சமயப் பிரமுகர் பதிவாளர் ஆ.கந்தையா தலைமையில் ஆலய பக்தர்கள் அங்கு சென்று வழி பாடுகளை நடாத்தியுள்ளனர். யுத்த நடவடிக்கை காரணமாகச சேதமடைந்த நிலையிலுள்ள இந்த ஆலயததின் புனருத்தாரணப் பணிகளை மேற்கொள்ள வென மேற்படி ஆலயத்தின் பிரதான தர்மகர்த்தாவான மறவன்புலவு க.சச்சி தானந்தன அடுத்த மாதம் தமிழகத்தில் இருந்து வருகை தரவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ந-16)

# எரிபொருள் விலை அதிகரிப்பால் மின் உற்பத்திச் செலவு உயர்வு

(கொழும்பு)

எரிபொருளின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக மின்சாரக கட்டணங்களை தற்போதைய நிலையிலேயே வைத்திருக்க முடியாது என இலஙகை மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன சேகா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரித்துச் செல்லும் போது மின்சாரக் கட்டணத் தையும் அதிகரிக்காததால் மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரித் துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 60 வீதமான மின்சாரம் எாிபொருட்களைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். நிலக்கரியைப் பயன்படுத்திக் குறைந்த விலையில் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எல்லாவற்றையும் இயக்குபவர் கடவுள் ஒருவரே அவரைத்தவிர வேறுயாரும் இல்லை நிலத்தையும் நீரையும் பிரபஞ்சத்தையும் வியாபத்திருக்கும் அவருக்கு நான் என்னையே தருகிறேன் உலகங்கள் அனைத்தும் அழிந்த போதிலும் அவரால் படைக்கபபட்டயாவும் அழிந்த பின்னும் அவர் அழிய மாட்டார்.

சுவாமி விவேகானந்தர்

# புலனாய்வு அதிகாரி மீது சூடு; அரசாங்கம் கடும் கண்டனம்

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் முத்தலிப்பின் கொலைக்கு அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாகக் கருதப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவொன்று இந்தக் கொலையினை மேற்கொண்டதாக அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கொலை யுத்தநிறுத்த உடன்படிக்கையினை மீறும் செயலாகுமென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தக் கொலை சமாதான செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதுபற்றிய சகல முடிவுகளும் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# ஓமந்தைப் பிள்ளையார் கோயிலில் புத்தர்சிலை ராணுவத்தால் அமைப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பிள்ளையார் கோவில் நிலத்தில் புத்தர்சிலையை திடீரென இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

மூன்றடி உயரத்தில் இந்தப் புத்தர் சிலையை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். பிள்ளையார் கோவில் குருக்களாக இருந்தவரை சித்திரவதை செய்து அப்பகுதியில் இருந்து விரட்டி அடித்துள்ளனர் என்று அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர்.

அங்கு வாழ்ந்த குருக்களின் நான்கு தலைமுறையினர் இந்தப் பிள்ளையார் ஆலயம் அருகிலேயே வசித்துவந்ததாக சுட்டிக்காட்டும் அம்மக்கள் அப்பகுதி மக்கள் அனைவரையும் கட்டாயப் புகைப்படம் எடுத்துள்ள இராணுவம், புத்தர்சிலைக்கு எதிராக எதுவித போராட்டத்தையும் நடத்தக் கூடாதென எச்சரித்துள்ளனர்.

இதேவேளை புத்தர்சிலை அமைந்துள்ள இடம், பௌத்த பாரம்பரியங்களுக்குரிய இடமென இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

# ஊடகவியலாளர் நடேசனின் முதலாம் ஆண்டு நிகழ்வு

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் வி.நடேசனின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. யாழ். ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, வடமராட்சி முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன், பவ்ரல் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நிரமானுஜன், யாழ். கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் சூரியகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

இதற்கு முன்னதாக மலர்மாலையினை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் அணிவித்தார். பொதுச் சுடரினை பொது அமைப்புக்களின் பிரதிநிதி செல்வநாதன்ள ஏற்றினர். (ச-43)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பாதுகாப்புச் சேவைகளை வழுங்குவதற்கான விலைமனு கோரல்

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுள்ள பாதுகாப்புச் சேவைகளை வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களிடம் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து வட்டக்கச்சி விவசாயப்பண்ணைக்கு மாற்றலாகிச்செல்லும் விவசாயபீடத்திற்கு கீழே குறிப்பிட்டவாறு சேவைகளை வழங்குவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**(அ) காலை 6மணி தொடக்கம் மாலை 6மணிவரை.**

**(ஆ) மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணிவரை.**

தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 10பாதுகாப்பு சேவையாளர்களை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும் பல்கலைக்கழகம் கோரும் திகதியில் இருந்து பணியைப் பொறுப்பேற்கத்தயாராகவும் இருத்தல்வேண்டும்.

கூறுவிலை படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபாய் 250மட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காசாளர் கருமபீடத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 30.06.2005ற்கு முன்பதாக பிரதிப்பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடதுமூலையில் குறிப்பிட்டு தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் அவர்களுக்குக்கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல்வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 20.07.2005 அன்று மாலை 3மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்களை திறக்கும் பொழுது பிரசன்னமாகியிருக்க முடியும்.

தபால் பெட்டி இல.57
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
27.05.2005

(C/1419)

**துணைவேந்தர்**
யாழ்.பல்கலைக்கழகம்.


## கிணற்றில்...

எடுத்தபோது அது வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி காண்டீபன் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். அருகில் இருந்த அ.பார்த்தீபன் (வயது 21), எஸ்.சாஜீர் (வயது 20), கு.ரஜிதா (வயது 7) ஆகிய மூவரும் படுகாயமடைந்தவர்களாவார்.

இவர்கள் மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## திருமலை புத்தர்...

இச்சிலை அமைக்கப்பட்டதாக நீதிமன்றம் பிரகடனப்படுத்துவதன்மூலமே இவ்விவகாரம் தொடர்பாக உகந்த முடிவினை எடுக்கமுடியும் எனவும் அரச சட்டத்தரணி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இச்சிலை அமைக்கப்பட்ட பகுதியில் புதிய கட்டடம் எதனையும் அமைக்கவோ அல்லது அபிவிருத்தி செய்யவோ இவ்வழக்கின் எதிரியோ அல்லது அவர்களின் முகவர்களோ முயலக்கூடாது என கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை இவ்வழக்கு விசாரணையில் ஆஜராகுமாறு எதிரியான கீர்த்திலாலுக்கு நீதிமன்றத்தினால் அழைப்பாணை அனுப்பப்படவேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## புலனாய்வுத்துறை...

மேலதிக விசாரணைகள் இரகசியப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேஜர் முத்தலிப் 1987இல் இரண்டாம் லெப்டினனாக ஐந்தாவது கெமுனுவோச் படைப்பிரிவில் இணைந்துகொண்டார். அவர் லெப்டினன்டாக பதவியுயர்வு பெற்றபின் ஜூன் 1999 இல் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணிநிலைப்படுத்தப்பட்டார்.

1992 இல் கப்டனாக பதவி உயர்வு பெற்ற இவர், இராணுவத் தலைமையகத்தில் பொது அதிகாரிகள் குழாமில் பணியாற்றினார். 1995இல் மேஜராக பதவி உயர்வுபெற்றார். எம்.ஐ.சியின் பயிற்சிப் பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய இவர், யாழ்ப்பாண புனனாய்வு பாதுகாப்புப் பிரிவின் கட்டளை அதிகாரியாகவும் மூன்றரை ஆண்டுகள் பணியாற்றினார்.

1997 இல் கொழும்பு திரும்பிய மேஜர் முத்தலிப் எம்.ஐ.சியின் வழிநடத்தல் பணியகத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றினார். 2001 செப்ரம்பர் 1இல் எம்.ஐ.சியின் பொதுக் கட்டளை அதிகாரியாக வவுனியாவில் நியமனம் பெற்றார்.

2004 நவம்பர் 2 இல் எம்.ஐ.சியின் முதலாவது றெஜிமெண்டின் கட்டளை இடும் அதிகாரியாகப் பொறுப்பேற்றார். அமெரிக்கா, இந்தியா, வங்காளதேசம் போன்ற நாடுகளில் புலனாய்வு தொடர்பான சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற இவர், சிறிலங்காப் படைத்துறை விருதுகளில் ஒன்றான ரணவிக்கிரம பதக்கத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தில் பணிபுரியும் குமுதினி அமரசிங்க என்பவரை திருமணம் செய்துள்ள மேஜர் முத்தலிப்பிற்கு சாரா (வயது 9), மார்லீக் (வயது 4) என இரு குழந்தைகள் உண்டு.

இதேவேளை வன்னிப் பகுதியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஊடுருவல்கள், வன்னியில் ஆழஊடுருவி தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை கொலைசெய்தமை போன்ற நடவடிக்கைகளின் பின்னணியில் இவர் செயற்பட்டுவந்ததாகக் கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட சம்பூர் தாக்குதல், மூதூர் மற்றும் கட்டுநாயக்க விமானத் தாக்குதல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களைப் பெறுவதில் இவர் முக்கிய பங்கு வகித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு வெள்ளவத்தை ஆயுதக் களஞ்சியத்தைக் கண்டுபிடிக்கவும் முக்கிய பங்காற்றிய இவர், மிலேனியம் சிற்றி இராணுவ நடவடிக்கைப் பிரிவின் உதவித் தளபதியாகவும் கடமையாற்றி உள்ளார்.

இலங்கை இராணுவத்துக்காக பாரிய சேவையாற்றியதாக கருதப்படுகின்ற முத்தலிப், சுட்டுக்கொல்லப்பட்டமையானது இராணுவத்தை கடும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை முத்தலிப்பின் படுகொலை குறித்து தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், அது குறித்துத் தாங்கள் கருத்துத் தெரிவிக்க முடியாதென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (ச-4)

## வவுனியா..

னாள் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற் உறுப்பினர்கள் ஆகியோர் உறுதியளித்ததற்கமைய தீர்வுகிடைக்காததற்கான காரணங்களை தெரியப்படுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## சிறிலங்கா ரெலி...

தெரிவித்தார்.

இதேவேளை சம்பவ இடத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கேபிள்சுற்றுக்கள் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாலைதீவு...

நம்பிக்கை வைத்துள்ளனர். இதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டபோது அவர்களால் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அமைதிப்பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கும் இவ்வேளை எங்கள் பிரச்சினைகளை உங்கள் மூலம் அரசிற்கு தெரியப்படுத்தப்பட்டால் நாங்கள் மீண்டும் தாய்நாடு வந்துசேரமுடியும். இதுநாள் வரையில் எங்களுக்கு மறுவாழ்வு இருக்கின்றது என்றோ, மீண்டும் நாட்டிற்குச் செல்வோம் என்றோ நினைத்துக்கூட பார்க்கவில்லை உங்களுக்கு கடிதம் எழுத ஆரம்பித்த பிறகுதான் எங்களுக்கு எங்கள் வாழ்வுதிரும்பக் கிடைக்கும், நாங்களும் எங்கள் தாய்நாடு செல்லமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள இலங்கையர்கள் அனைவரும் உங்கள் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளோம் குறிப்பாக சிங்களவர் உங்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதுவே நம்இயக்கத்தின் மாபெரும்வெற்றி. உங்களால் மட்டுமே அவர்களை காப்பாற்றமுடியும் என்று அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ளனர்.

தாங்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு பிரச்சினைக்கு தீர்வுகண்டால் நிச்சயம் நாங்கள் காப்பாற்றப்பட்டு நாங்கள் நாடு திரும்புவோம். எங்களது எதிர்காலம் இப்பொழுது உங்கள் கைகளில்தான் இருக்கிறது தாங்கள் தயவுகூர்ந்து இந்தப்பிரச்சினையில் தலையிட்டு வாழ்வளிக்கவேண்டுகின்றோமென அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)


மனோகரா யாழ்



ஜீவா, கஜாலா, சரண்யா நடித்த

ராம்

கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும்

கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ஷாருக்கான், ஐஸ்வர்யா நடித்த

தேவதாஸ்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.